பக்கங்கள்: 12

விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 04 வள்ளுவர் ஆண்டு 2051 புரட்டாதி 06 செவ்வாய்க்கிழமை 22.09.2020 கதிர் 317

### இனி இது ரகசியம் அல்ல!

நேற்றுக் காலையில் எழுந்ததும் எனக்கு சற்று மனத்திருப்தி – பத்திரிகைச் செய்தி ஒன்றைப் பார்த்ததும்.

*‘தடையை நீக்கும் எண்ணத்தில் அரசு?’* என்று அச் செய்தி பிரசுரமாகியிருந்தது. *‘தியாகிதிலீபனின் நினைவேந்தலுக்கு* பக்கம் 02 ›››

# சாக்குப்போக்குக் கதைகள் கூறி நழுவ முடியாது ராஜபக்ஷ அரசு!

## நினைவேந்தல் தடையுத்தரவுகளை உடன் நீக்க வேண்டும் என்று மாவை வலியுறுத்து



யாழ்ப்பாணம், செப். 22


நினைவேந்தல் தடையுத்தரவுகளுக்கும் அரசுக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்றும், நீதிமன்ற உத்தரவுகளில் ஜனாதிபதி தலையிடமாட்டார் என்று சாக்குப் போக்குக் கதைகள் கூறி ராஜபக்ஷ அரச தரப்பினர் நழுவ முடியாது. நினைவேந்தல் தடையுத்தரவுகளை உடன் நீக்க வேண்டும்.

– இவ்வாறு வலியுறுத்தினார் இலங்கைத்தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை. சோ.சேனாதிராஜா.

தியாக தீபம் பக்கம் 02 ›››

# ஜனாதிபதியின் அரசியல் ரீதியான தீர்மானத்தின்படிதான் நினைவேந்தலுக்குப் பொலிஸ் தடை உத்தரவு பெற்றது!

## அந்த வழியிலேயே சுமுகமாக நீக்கலாம் என்கிறார் சி.வீ.கே.



யாழ்ப்பாணம், செப்ரெம்பர் 22

“ஜனாதிபதியின் அரசியல் ரீதியான தீர்மானத்தின்படி பொலிஸாருக்கு வழங்கப்பட்ட அறிவுறுத்தலுக்கு அமையவே நீதிமன்றத்தின் ஊடாக பொலிஸார் திலீபனின் நினைவு தினத்திற்கு இவ்வாறான தடை உத்தரவை எடுத்துள்ளனர்.

“திலீபனின் நினைவு நாளுக்கான இந்தத் தடை விவகாரத்தில் ஜனாதிபதி நீதிமன்றத்தின் நடவடிக்கையில் தலையிட வேண்டிய அவசியமே இல்லை. அவர் அரசியல் ரீதியான தீர்மானம் ஒன்றை எடுத்து, பொலிஸ் திணைக்களத்திற்கு நீதிமன்றத்தின் ஊடாகத் தடை உத்தரவை நீக்குமாறு கட்டளை ஒன்றை பிறப்பித்தால் தற்போது எழுந்துள்ள பிரச்சினைக்கு சுமுகமான தீர்வினை காண முடியும்.”

– இவ்வாறு தெரிவித்துள்ளார் வடக்கு மாகாண சபையின் அவைத்தலைவர் சி.வீ.கே. சிவஞானம்.

பக்கம் 02 ›››

# உள்நாட்டு விடயங்களில் ஐக்கிய நாடுகள் சபை தலையிடாது என நம்புகின்றாராம் கோட்டாபய

## ஐ.நாவுக்கான காணொலி உரையில் அவரே தெரிவிப்பு



கொழும்பு,செப்.22

உள்நாட்டு விடயங்களில் ஐக்கிய நாடுகள் சபை தலையிடாது எனத் தாம் எதிர்பார்க்கின்றார் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் 75 ஆவது ஆண்டு நிறைவை ஒட்டிய உயர்மட்டக் குழு கூட்டத்தில் காணொலி ஊடாக உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். பக்கம் 02 ›››

# கொரோனா 3299; நேற்று மட்டும் 12


இலங்கையில் நேற்று மட்டும் 12 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

வெளிநாடுகளிலிருந்து நாடு திரும்பியவர்களே கொரோனாத் தொற்றுடன் இனங்காணப்பட்டுள்ளனர்.

இதையடுத்து நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 3299 ஆக அதிகரித்துள்ளது.

இதுவரை கொரோனாத் தொற்றில் பக்கம் 02 ›››

# பல்கலையில் இரத்ததானம்




யாழ்ப்பாணம்,செப்.22

யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினால் நாளை யாழ். பக்கம் 02 ›››

# ரவிக்கும் அலோசியஸுக்கும் எதிராகக் குற்றப்பத்திரிகை!



முன்னாள் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க மற்றும் பேர்பச்சுவல் ட்ரசரீஸ் நிறுவனத்தின் உரிமையாளர் அர்ஜுன் அலோசியஸ் ஆகி பக்கம் 02 ›››

# மீண்டும் வாய்ப்பளித்தால் உண்மையைக் கூறுவேன்

## ஹேமசிறி பொய்யுரைக்கிறார் என மைத்திரிபால சிறிசேன பதிலடி

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் ஆராயும் ஜனாதிபதிவிசாரணை ஆணைக் குழுவில் முன்னாள் பாதுகாப்பு செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைப் பற்றி கூறிய கருத்துக்கள் உண்மைக்குப் புறம்பானவை என்று அவரது பிரத்தியேக செயலாளர் சமீர டி சில்வா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக ஞாயிற்றுக் கிழமை அவரால் வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:–

உயிர்த்த பக்கம் 02 ›››

# ‘19’ – சாபக்கேடு ‘20’ – அவசியம்!

## அமைச்சர் பீரிஸ் கூறுகிறார்



கொழும்பு,செப்.22

“அரசமைப்பின் 19ஆவது திருத்த சட்ட மூலம் நாட்டிற்கு ஒரு சாபக்கேடு. இதில் பகுதி பகுதியாக திருத்தங்கள் மேற்கொள்ளப்படுவதில் பயன் இல்லை. இது இந்த நாட்டின் சட்டப்புத்தகத்தில் இருந்து நீக்கப்பட வேண்டிய ஒன்றாகும். – என்று அமைச்சர் ஜி.எல். பீரிஸ் பக்கம் 02 ›››

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

*விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்குவது தொடர்பாக அரசு ஆராய்ந்து வருகின்றது என்று அரசின் உள்ளகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. தடையை அடுத்துக் கிளம்பியுள்ள எதிர்ப்புகளை அடுத்ததே அரசு இந்த முடிவை நோக்கி நகர்கின்றது என்றும் தெரியவருகின்றது.'*– என்ற சாரப்பட அமைந்தது அந்தச் செய்தி.

அந்த செய்தி தந்த மகிழ்வில் பாதுகாப்பு அமைச்சுடன் தொடர்புடைய – எனக்குத் தெரிந்த – வட்டாரம் ஒன்றுடன் தொடர்பு கொள்ள முயன்றேன். நீண்ட காலமாக அந்த வட்டாரத்துடன் தொடர்பு கொள்ள வேண்டிய தேவை எனக்கு இருக்கவில்லை. தெரியாமல் அகமத்தாக அந்தத் தரப்பிடம் நேற்றுத் தேடிப் போய் மாட்டி விட்டேன் போலும்.

எனது அழைப்புக் கிடைத்ததும் அந்த வட்டாரம் ஆங்கிலத்தில் நீட்டி முழக்கத் தொடங்கியது.

அப்படி ஏதும் தளர்வு எண்ணம் இல்லை என்றது அந்த வட்டாரம்.

*“எமது நிலைப்பாட்டைத் தெட்டத் தெளிவாகவும் உறுதியாகவும் பாதுகாப்புச் செயலாளர் கூறிவிட்டார். 'பயங்கரவாதிகள்' விடயத்தில் அரசு உறுதியாக இருக்கும். இந்தத் தடை அரசியல்வாதிகளுக்கு மட்டுமல்ல, உங்களைப் போன்ற ஊடகங்களுக்கும்தான். உங்கள் எழுத்துக்கள் எல்லாம் மொழிபெயர்த்து அவதானிக்கப்படுகின்றன என்பதை மறந்து விடாதீர்கள். சட்டத்துக்கு உட்பட்டுச் செயற்படுகின்றமையை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.!”*– என்று எனக்குக் 'குளிசை' கொடுக்கவும் அந்த வட்டாரம் தவறவில்லை. நான் சிரித்து விட்டுத் தொலைபேசியைத் துண்டித்து விட்டேன்.

எனக்குள் ஆச்சரியம். ஏன் அந்தப் பத்திரிகை அப்படிச் செய்தி வெளியிட்டது என்பது புரியவில்லை.

நினைவேந்தல் தடைக்கு எதிராக தமிழ்த் தேசியக் கட்சிகள் எல்லாம் ஒன்றிணைந்து ஓர் ஐக்கிய எழுச்சி ஏற்பட்டுள்ளது. தடைக்கு எதிராக தமிழ் மக்கள் மத்தியில் உணர்வெழுச்சி ஏற்பட்டு வருகையில் அதற்கு ஆப்பு வைக்கும் விதத்திலான இந்தச் செய்தியின் நோக்கம், தாற்பரியம் புரியவில்லை. விட்டு விட்டேன்.

நேற்று நண்பகலில் ஒரு தகவல் கிடைத்தது. திலீபன் நினைவேந்தல் தடைக்கு எதிரான வழக்கு நேற்றுக் காலை யாழ்.நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டு பிற்பகல் 1.30 மணிக்கு ஒத்திவைக்கப்பட்டது என்பது தெரிந்ததுதான்.

அதற்கிடையில்தான் இந்தத் தகவல் கிடைத்தது. காலையில் நீதிமன்ற வளாகத்தில் இருந்து ஒரு நண்பர் தொலைபேசி அழைப்பு எடுத்தார்.

*“இன்று வழக்கு விசாரணைக்கு சுமந்திரன் வருகின்றாரா?”* – என்று கேட்டார்.

*“எனக்குத் தெரியவில்லை. நேற்று மாலை அவர் கொழும்பில் இருந்தார் என அறிந்தேன். பெரும்பாலும் இன்று அவர் யாழ். வந்திருக்க மாட்டார். அதனால் வழக்குக்கு அவர் வருதற்கு சந்தர்ப்பம் இல்லை”* – என்றேன்.

அப்போதுதான், அண்மைக் காலத்தில் அதிகம் பெயர் அடிபட்ட ஒரு சட்டத்தரணியின் பெயரைக் குறிப்பிட்ட என் நண்பர் ஒரு தகவல் சொன்னார்.

*“அந்தச் சட்டத்தரணி காலையிலை இன்னொருவருடன் உரையாடிய சமயம் நான் பகத்தில் நின்றேன். 'என்ன பெரியவர் (சுமந்திரன்) அரசாங்கத்தைப் பிடிச்சுப் பேசி சமாளித்து விட்டாராம். அந்த முடிவைத் தன்ரை வாதத் திறமையால் கோட்டிலை கிடைச்ச முடிவாகக் காட்டிற எண்ணத்தோடை கோர்ட்டுக்கு வந்து கொண்டிருக்கின்றாராம். 'என்று அந்தச் சட்டத்தரணி சொன்னவர். ஆனால் காலையிலை வழக்கு எடுக்கும் வரை நான் நிண்டனான். சுமந்திரன் வரவும் இல்லை. அவர் பெயர் பதியவும் இல்லை.”*– என்றார் அந்த நண்பர்.

மதிய வேளை. எனது முக்கய நிருபர் ஒருவர் அலுவலகத்தில் என் மேசையின் முன்னால் அமர்ந்திருந்து பேசிக் கொண்டிருந்தார். அப்போது அவருக்கு ஓர் அழைப்பு வந்தது. அழைப்பில் மறு புறத்தில் இருந்தவர் என்ன பேசினார் என்பது எனக்குக் கேட்கவில்லை. ஆனால் எனது செய்தியாளர் என்ன பேசினார் என்பது எனக்குப் கேட்டது. அதனால் விடயம் புரிந்தது.

*“ஓ...! அந்தச் செய்தியை நம்பியே கேட்கிறியள்...? எப்ப உவங்கள் திருந்தப்போகிறாங்கள்...? அப்படி ஒண்டும் இல்லை. அப்படி ஒரு முடிவும் இல்லை, தீர்மானமும் இல்லை, யோசனையும் இல்லை... அது பாருங்கோ இண்டைக்கு வழக்கிலை யாழ் மாநகர சபை சார்பிலை சுமந்திரன் முன்னிலையாவார் எண்டு ஒரு பேச்சு இருந்தது. அப்படித்தான் பலரும் நம்பியிருந்தவையள். தப்பித் தவறி அவர் வந்து, கோர்ட்டிலை தடை உத்தரவை முறியடிச்சு ஒரு கட்டளையை எடுத்துவிட்டார் எண்டால் அவருக்கு நல்ல பெயர் எல்லே போயிடும்? தங்கடை அரசியல் எல்லோ அடிப்பட்டுப்போகும்.? சுமந்திரன் தன்ர வாதத்தினாலை செய்யக் கூடிய மனுசன். போன முறையும் செய்து காட்டினவர்தானே... அதுதான். முன்யோசனையா உப்பிடி ஒரு செய்தியைப் போட்டுவைச்சவை எண்டு உள்வீட்டுச் சமாச்சாரமாக அறிந்தேன். தப்பித் தவறி சுமந்திரன் தடையை நீக்கும் கட்டளையை நீதிமன்றத்தில் பெற்றால், பார்த்தியளோ நாங்கள் முதலிலையே சொல்லி வைச்சோம்தானே தடையை நீக்கிற எண்ணத்திலை அரசு எண்டு. அதாலைதான் நீதிமன்றம் அப்படிக் கட்டளை வழங்கினது, சுமந்திரனின் வாதத்தினாலை இல்லை எண்டு செய்தி போடலாம்தானே... அது பிழைச்சுப் போச்சு. சுமந்திரனும் வரவில்லை. தடை உத்தரவும் நீக்கப்படவில்லை. ”*– என்று விளாசினார் என் செய்தியாளர்.

எனக்கு விடயம் அத்துப்படியாக விளங்கியது. உங்களுக்கும்தானே வாசகர்களே....?

– மின்னல் –

## ஜனாதிபதியின் அரசியல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணம் நல்லூரில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

திலீபனின் நினைவு தினத்திற்கு விதிக்கப்பட்டுள்ள தடை தொடர்பில் ஜனாதிபதி நீதிமன்ற விடயங்களில் தலையிட முடியாது என ஊடக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல அண்மையில் கருத்து தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி இந்த விடயத்தில் நீதிமன்றத்தில் தலையிட வேண்டிய தேவை எழுவதாக எனக்குத் தெரியவில்லை. ஏனெனில் நீதிமன்றம் தாமாக முன்வந்து இந்த நினைவேந்தலுக்கு தடை உத்தரவைப் போடவில்லை.

இலங்கைப் பொலிஸ் திணைக்களம் சமர்ப்பித்த முறைப்பாட்டின் அடிப்படையிலேயே இந்த தடை உத்தரவு கிடைத்துள்ளது. ஆகவே இலங்கை பொலிஸ் திணைக்களத்தினை பொறுத்தவரையில் அது ஜனாதிபதியின் நேரடி அதிகாரத்துக்கு உட்பட்ட திணைக்களம்.

ஜனாதிபதி அரசியல் ரீதியாக ஒரு தீர்மானத்தை எடுத்து, பொலிஸ் திணைக்களத்திற்கு தடை உத்தரவினை நீதிமன்றத்தின் ஊடாக பெறுமாறு வழங்கிய அறிவுரைக்கு அமையவே இவ்வாறான தடை உத்தரவு தற்போது பெறப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் அரசியல் ரீதியான தீர்மானத்திற்கு இணங்கப் பொலிஸாருக்கு வழங்கப்பட்ட அறிவுறுத்தலுக்கு அமையவே நீதிமன்றத்தின் ஊடாக பொலிஸார் திலீபனின் நினைவு தினத்திற்கு இவ்வாறான தடை உத்தரவைப் பெற்றுள்ளனர்.

எனவே ஜனாதிபதி நீதிமன்ற விடயங்களில் தலையிட வேண்டிய தேவையே இந்த விடயத்தில் எழவில்லை. மாறாக ஜனாதிபதி அரசியல் ரீதியான தீர்மானத்தை எடுத்து, அதனை பொலிஸ் திணைக்களத்திற்கு வழங்கி, தடையை நீதிமன்றத்தின் ஊடாக நீக்குமாறு ஒரு கட்டளையை வழங்கலாம். அதன் மூலம் இந்தப் பிரச்சினைக்குச் சுமுகமான முறையில் தீர்வைக் காணமுடியும். – என்றார்.

## கொரோனா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருந்து குணமடைந்தவர்களது மொத்த எண்ணிக்கை 3 ஆயிரத்து 100 ஆக உயர்வடைந்துள்ளது.

தற்போது 186 பேர் கொரோனா சிகிச்சை நிலையங்களில் 177 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

அதேவேளை, சிகிச்சை பலனின்றி இதுவரை 13 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சாக்குப்போக்குக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நினைவேந்தலுக்கு ராஜபக்ஷ அரசு விதித்துள்ள தடைக்கு எதிராகத் தமிழ்க் கட்சிகள் முன்னெடுத்துள்ள நகர்வுகளுக்கு ஆதரவு தெரிவித்துள்ள அனைத்துத் தரப்புக்களுக்கும் பெரும் நன்றிகளைக் கூறுகின்றோம். ராஜபக்ஷ அரசு விதித்துள்ள தடைக்கு எதிராக இன்று செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகவுள்ள நாடாளுமன்றக் கூட்டத் தொடரில் அனைத்துக் கட்சிகளும் குரல் கொடுக்கவேண்டும். தடை நீக்கத்துக்கு எதிராகக் குரல் எழுப்பவேண்டும் எனவும் அவர் மேலும் வலியுறுத்தினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது: –

நினைவேந்தலுக்கான தடைகளை நீக்கக் கோரி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசிடம் தமிழ்க் கட்சிகள் ஓரணியில் முன்வைத்துள்ள நியாயமான கோரிக்கைகளை வரவேற்றுள்ள ரவூப் ஹக்கீம் தலைமையிலான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ரிஷாத் பதியுதீன் தலைமையிலான அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், அஸாத் ஸாலி தலைமையிலான தேசிய ஐக்கிய முன்னணி உள்ளிட்ட முஸ்லிம் கட்சிகள், மனோ கணேசன் தலைமையிலான தமிழ் முற்போக்குக் கூட்டணி, சிறிதுங்க ஜயசூரிய தலைமையிலான ஐக்கிய சோசலிசக் கட்சி, விக்கிரமபாகு கருணாரத்ன தலைமையிலான நவசமசமாஜக் கட்சி உள்ளிட்ட முற்போக்கு கட்சிகள் ஆகியவற்றுக்கு எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

எமது கோரிக்கைகளை அரசு நிறைவேற்றாவிடின் நாம் முன்னெடுக்கவுள்ள சாத்வீகப் போராட்டங்களுக்கும் மேற்படி கட்சிகள் ஆதரவு வழங்க முன்வந்துள்ளமையையிட்டு நாம் பெருமகிழ்வு அடைகின்றோம். நாட்டிலுள்ள ஏனைய ஜனநாயகக் கட்சிகள், முற்போக்கு சக்திகள், புத்திஜீவிகள் மற்றும் சிவில் அமைப்புகளின் ஆதரவையும் நாம் எதிர்பார்த்திருக்கின்றோம்.

அதேவேளை, இந்த நாடாளுமன்ற அமர்வுகளில் அனைத்துக் கட்சிகளின் உறுப்பினர்களும் எமது கோரிக்கைகளை நிறைவேற்றக் கோரி அரசுக்கு அழுத்தம் கொடுத்து உரையாற்ற வேண்டும் என்றும் பணிவாகக் கேட்டுக்கொள்கின்றோம்.

இறந்த உறவுகளை நினைவுகூர ஒவ்வொரு இனத்துக்கும் உரிமையுண்டு. அதை எவரும் தடுத்து நிறுத்த முடியாது.

தியாக தீபம் திலீபன் நினைவேந்தலுக்கான தடைகளை நீதிமன்றங்களில் ஊடாக பொலிஸாரே கோரினர். பொலிஸார் தனியார் அமைப்பினர் அல்லர். அவர்களும் அரசின் ஒரு முக்கிய பிரிவு. இந்தத் தடையுத்தரவுகளை பொலிஸார் ஊடாக நீதிமன்றங்களில் அரசே பெற்றுக்கொண்டது. இது அனைவரும் அறிந்த உண்மை.

நினைவேந்தல் தடையுத்தரவுகளுக்கும் அரசுக்கும் எவ்வித தொடர்பும் இல்லை. நீதிமன்ற உத்தரவுகளில் ஜனாதிபதி தலையிடமாட்டார் என்று சாக்குப்போக்குக் கதைகள் கூறி அரச தரப்பினர் நழுவ முடியாது.

கடந்த ஆட்சியில் பல நினைவேந்தல் நிகழ்வுகளை நாம் சுதந்திரமாக நடத்தினோம். சில இடங்களில் தடையுத்தரவுகளை நீதிமன்றங்கள் ஊடாகப் பொலிஸார் கோரியபோதும் நீதிமன்றங்கள் எமது பக்கமே நின்றன. எமது நியாயமான கோரிக்கைகளை ஏற்றன.

ஆனால், இந்த ஆட்சியில் அனைத்து நடவடிக்கைகளும் அரசின் தலையீடுகளுடன் நடக்கின்றமை வெளிப்படை. ஏனெனில் கடந்த ஆட்சியில் நினைவேந்தல் நிகழ்வுகளுக்குத் தடை விதிக்காத நீதிமன்றங்கள் இந்த ஆட்சியில் ஏன் தடை விதிக்கின்றன என்ற கேள்விகள் எம்மிடம் எழுந்துள்ளன.

எனவே, நீதி அமைச்சர் இந்த விவகாரத்தில் நேரடியாகத் தலையிட அதிகாரம் இருக்கின்றது. அதற்கு மேல் மனிதாபிமான ரீதியில் ஜனாதிபதி நினைத்தாலும் நினைவேந்தல் தடையுத்தரவுகளை நீக்க முடியும் – என்றார்.

## பல்கலையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பல்கலைக்கழக வளாகத்தில் இரத்த தான முகாம் நடாத்தப்படவுள்ளது.

இவ் இரத்த தான முகாமிற்கு குருதிக் கொடையாளர்களை ஒத்துழைப்பு வழங்குமாறு மாணவர் ஒன்றியத்தினர் கேட்டுக் கொண்டுள்ளனர்.

## மீண்டும்வாய்ப்பளித்தால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் ஆணைக்குழுவில் முன்னாள் ஜனாதிபதியைப் பற்றி ஹேமசிறி பெர்னாண்டோ கூறிய விடயங்கள் உண்மைக்குப் புறம்பானவையாகும்.

சிலவேளைகளில் எதிர்வரும் நாள்களில் முன்னாள் ஜனாதிபதி ஆணைக்குழுவில் சாட்சியமளிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டால் ஹேமசிறி பெர்னாண்டோவினுடைய கருத்துக்களின் உண்மைத் தன்மையை அதன்போது தெளிவுபடுத்துவார் – என்றுள்ளது.

## ரவிக்கும் அலோசி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யோருக்கு எதிராக இலஞ்ச, ஊழல் ஆணைக்குழுவினால் நேற்றுக் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கொள்ளுப்பிட்டியில் அமைந்துள்ள சொகுசு தொடர்மாடி வீட்டைலஞ்சமாக வழங்கியமை மற்றும் பெற்றுக்கொண்டமை உள்ளிட்ட 6 குற்றச்சாட்டுகளின் கீழ் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் அவர்கள் இருவர் மீதும் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கடந்த 2016ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 12ஆம் திகதி முதல் செப்டெம்பர் 30ஆம் திகதிக்கு இடைப்பட்ட காலப்பகுதியினுள் குறித்த வீட்டை வழங்கியமை மற்றும் பெற்றுக்கொண்டமை இடம்பெற்றுள்ளது என இலஞ்ச, ஊழல் ஆணைக்குழுவினால் தாக்கல் செய்யப்பட்டுள்ள குற்றப்பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## '19' - சாபக்கேடு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன கட்சியின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு: –

20ஆவது அரசமைப்புத் திருத்தச் சட்டமூலம் நாளை (இன்று) நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும். 20ஆவது திருத்தச் சட்டமூலம் தொடர்பாக விடுக்கப்பட்ட வர்த்தமானி அறிவிப்பை எந்த வகையிலும் விலக்கிக்கொள்வதற்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தயாராக இல்லை. தேவைப்படும் பட்சத்தில் குழுநிலையின் போது மாத்திரம் மாற்றங்களை மேற் கொள்வதற்கு உடன்பட்டுள்ளோம்.

திருத்த சட்ட மூலம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் ஏழு நாட்களுக்குள் இது தொடர்பான எதிர்ப்புக்களை உயர் நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்கலாம்.

பொதுத் தேர்தலின் போது ஆரம்பம் முதல் இறுதி வரை நாம் தொடர்ச்சியாக 20 ஆவது அரசமைப்புத் திருத்தம் குறித்து எமது நிலைப்பாட்டை பொது மக்கள் முன் வைத்தோம். 19ஆவது திருத்த சட்ட மூலம் நாட்டிற்கு ஓர் சாபக்கேடு. இதில் பகுதி பகுதியாக திருத்தங்கள் மேற்கொள்ளப்படுவதில் பயன் இல்லை .இது இந்த நாட்டின் சட்டப் புத்தகத்தில் இருந்து நீக்கப்பட வேண்டிய ஒன்றாகும். – என்றும் குறிப்பிட்டார்.

## உள்நாட்டு விடய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் முற்கூட்டியே பதிவு செய்யப்பட்ட இந்தப் பேச்சு நேற்று ஒளிபரப்பாகியது.

“உலகம் பொதுவான ஓர் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ள இச்சமயத்தில் ஐக்கிய நாடுகளே எமக்குத் தேவை.

“அதேசமயம் நாடுகளின் இறைமை தொடர்பான சமத்துவம், ஆள்புல ஒருமைப்பாட்டை மதித்தல், அவற்றின் உள்விடயங்களில் தலையிடாமை போன்றவற்றில் முக்கிய கவனம் செலுத்தப்படும் என நான் நம்புகிறோம்.” – என்றார் ஜனாதிபதி.

ஐ.நாவிந் 75ஆவது ஆண்டு பூர்த்தியை ஒட்டி 2020 செப்ரெம்பர் 21ஆம் திகதி ஜ.நா. பொதுச் சபையில் ஒரு நாள் உயர் மட்டக் கூட்டம் ஒன்றை கூட்டுவது என அங்கத்துவ நாடுகளின் தலைவர்கள் 2019 ஜ"னில் தீர்மானித்திருந்தனர்.

உலகின் 180 நாடுகளின் தலைவர்களும் பிரதிநிதிகளும் கலந்து கொண்ட அக்கூட்டத்தில் இலங்கையில் இருந்தபடி காணொலி மூலம் ஜனாதிபதி கோட்டாபய உரையாற்றினார். அந்த உரையிலேயே இவர் இவ்வாறு கூறினார். (உ)



# மட்டு.புதுக்குடியிருப்பு படுகொலை: 18 பேரின் நினைவேந்தல் நிகழ்வு!

## அரியநேத்திரனின் ஏற்பாட்டில்

மட்டக்களப்பு - மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட புதுக்குடியிருப்பு பகுதியில் படுகொலை செய்யப்பட்ட 18 பொதுமக்களின் நினைவேந்தல் நிகழ்வு பல்வேறு அச்சுறுத்தல் களுககு மத்தியில் நேற்று திங்கட்கிழமை மாலை இடமபெற்றது.

1990 ஆம் ஆண்டு காலப் பகுதியில் முஸ்லிம் ஊர்காவல் படையினரும் இராணுவத் தினரும் இணைந்து நடத்திய தாக்குதலில் 18 பொதுமக்கள் உயிரிழந்துள்ளனர்.

இவ்வாறு படுகொலை செய்யப்பட்டவர்கள் வருடாந்தம் நினைவுகூரப்பட்டு வந்த நிலையில் இந்த ஆண்டு அந்த நினைவுகூரலுக்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தல் காரணமாக அனுஸ்டிப்புக்கான எந்த ஏற்பாடுகளும் செய்யப்படவில்லை.

இருப்பினும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரனால் நினைவேந்தல் நிகழ்வு இன்று ஏற்பாடு செய்யப்பட்டு அனு;டிக்கப்பட்டது.

புதுக்குடியிருப்பில் உள்ள படுகொலை செய்யப்பட்ட ஞாபகார்த்த தூபியருகே இந்த நிகழ்வு அவரால் அனுஸ்டிக்கப்பட்டது. இதன்போது சுடரேற்றி உயிர் நீர்த்தவர்களுக்கு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அஞ்சலி செலுத்தினார்.

வழமையாக இந்த நிகழ்வை ஏற்பாடுசெய்யும் ஏற்பாட்டுக்குழுவினருக்கு பொலிஸ் மூலமாக விடுக்கப்பட்ட அச்சுறுத்தல்கள் காரணமாக இந்த நிகழ்வை அவர்களால் நடாத்த முடியவில்லையென மக்கள் தெரிவித்தனர்.

# கொரோனா தொற்றிலிருந்து 12 பேர் வீடு திரும்பினார்கள்

கொழும்பு, செப்.22

நாட்டில் கொரோனா தொற்றில் இருந்து மேலும் 12 பேர் பூரணமாக குணமடைந்து வீடுகளுக்கு சென்றுள்ளனர் என சுகாதார அமைச்சு நேற்று (திங்கட்கிழமை) தெரிவித்துள்ளது.

அதன்படி, இதுவரையில் கொரோனா தொற்றுக்குள்ளாகி பூரணமாக குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 3 ஆயிரத்து 100 ஆக அதிகரித்துள்ளது.

மேலும் தொற்று உறுதியானவர்களில் 174 பேர் தொடர்ந்தும் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

அத்தோடு கொரோனா தொற்று சந்தேகத்தில் 33 பேர் தொடர்ந்தும் வைத்திய கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளனர் என சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவு அறிவித்துள்ளது.

இலங்கையில் இதுவரை 3 ஆயிரத்து 287 பேர் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகியுள்ள நிலையில் 13 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மழையுடனான காலநிலை நீடிக்கும் வழிமண்டலவியல் திணைக்களம்!

நாடு முழுவதும் காணப்படுகின்ற தென் மேற்குப் பருவப்பெயர்ச்சி நிலை காரணமாக நாட்டில் தற்போது காணப்படும் காற்று நிலைமையும் மழையுடனான வானிலையும் மேலும் தொடரும் என வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

வளிமண்டலவியல் திணைக்களம் நேற்று (திங்கட்கிழமை) காலை வெளியிட்டுள்ள வானிலை அறிக்கையிலேயே இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

மத்திய, சப்ரகமுவ, மேல் மற்றும் வடமேல் மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் அவ்வப்போது மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

சப்ரகமுவ மற்றும் மத்திய மாகாணங்களில் சில இடங்களில் 100 மி.மீற்றருக்கும் அதிகமான பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது. காலி, மாத்தறை மற்றும் களுத்துறை மாவட்டங்களில் சில இடங்களில் 75 மி.மீ அளவான ஓரளவு பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

வடமத்திய மாகாணத்தில் பல தடவைகள் மழைபெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

நாடு முழுவதும், குறிப்பாக வடக்கு, வடமத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும் திருகோணமலை மற்றும் ஹம்பாந்தோட்டை மாவட்டங்களிலும் மத்திய மலைநாட்டின் மேற்கு சரிவுப் பகுதிகளிலும் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 50 -60 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

# இலங்கைப் பொலிஸில் முதல் பெண் பிரதிப் பொலிஸ்மா அதிபர் நியமனம்



இலங்கைப் பொலிஸ் துறை வரலாற்றில் முதன்முறையாக பெண் பொலிஸ் அதிகாரிக்கு பிரதிப் பொலிஸ்மா அதிபராக பதவி உயர்வு வழங்க தேசிய பொலிஸ் ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது.

09 பெண் மூத்த பெண் பொலிஸ் அத்தியட்சகர்களின் பெயர்களைத் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவுக்கு பதில் பொலிஸ்மா அதிபர் சந்தன விக்ரமரத்ன பரிந்துரைத்துள்ளமையுடன், அதிலிருந்து ஒருவரைப் பிரதிப் பொலிஸ்மா அதிபராகத் தரமுயர்த்துமாறு கோரிக்கை விடுத்திருந்தார்.

இதையடுத்து, பொலிஸ் திணைக்களத்தின் சிறுவர் மற்றும் மகளிர் பணியகத்தைச் சேர்ந்த பிம்ானி ஜசிங்கராச்சி, பிரதிப் பொலிஸ்மா அதிபராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

ஜசிங்கரச்சி 1997 ஆம் ஆண்டு பொலிஸ் பரிசோதகராக சேவையில் இணைந்தார். பின்னர் 2017 இல் பொலிஸ் அத்தியட்சகராக தர முயர்த்தப்பட்டார்.

பொலிஸ் துறையில் உயர் பதவியை வகித்த முதல் பெண் அதிகாரி சிரேஷ்ட் பொலிஸ் அத்தியட்சகர் பிரமிளா திவாகர ஆவார்.

இவர் சிரேஷ்ட் பொலிஸ் அத்தியட்சகர் தரத்தில் இருந்தபோது, பதவியில் இருந்து ஓய்வு பெற்றார்.

பெண் அதிகாரியைப் பிரதிப் பொலிஸ்மா அதிபராக நியமிக்கும் தீர்மானத்ததை முதல் முறையாக தற்போது பொலிஸ் திணைக்களம் எடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மஞ்சள் உற்பத்தியில் அடுத்தவருடம் இலங்கை தன்னிறைவு காணுமாம்!



**அடுத்த வருடம் இலங்கை மஞ்சள் உற்பத்தியில் தன்னிறைவு காணும் என்று விவசாய ஏற்றுமதி திணைக்களம் தெரிவித்துள்ளார்.**

**தற்சமயம் 1500 ஹெக்டெயர் நிலப்பரப்பில் மஞ்சள் பயிரிடப்பட்டிருக்கிறது இதனால் அடுத்த ஆண்டின் பெப்ரவரி மாதத்தில் 22 ஆயிரத்து 500 மெற்றிக்தொன் மஞ்சள் அறுவடையாக கிடைக்கும் என்று ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.**

**இலங்கையில் இறக்குமதி தடை செய்யப்பட்டுள்ளமையால் மஞ்சள் உள்ளிட்ட சில பொருள்கள் நாட்டில் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.**

# ஜோன் அமரதுங்கவிற்கு தேசியப் பட்டியல் பதவி?

கொழும்பு, செப். 22

தனது ஐக்கியதேசியக் கட்சிக்கு கிடைத்த ஒரேயொரு தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை கட்சியின் தேசியப் பட்டியலின் பெயர் ஒழுங்கில் முதலாவதாக இருக்கும் முன்னாள் அமைச்சர் ஜோன் அமரதுங்கவிற்கு வழங்குவது என்ற தீர்வை கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க முன்வைத்துள்ளார் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஒன்பதாவது நாடாளுமன்றத்துக்கான தேர்தலில் படுதோல்வியைச் சந்தித்த, ஐக்கிய தேசியக் கட்சிக்கு, ஒரேயொரு தேசியப்பட்டியல் மட்டுமே கிடைத்தது.


## திருமண சேவை

தரகர்கூலி இல்லை, 50% பதிவு கழிவு. வரனை பல்வேறு விவரங்களை உள்ளீடு செய்து ஒரு கிளிக்கில் தேடுங்கள். அழையுங்கள் 076 664 9401, www.EQMarriage Service.com. எமது ஒன்லைன் மூல மான திருமண சேவையின் பிரதான அலுவலகம் காலி வீதி பம்பலப்பிட்டி கொழும்பிலுண்டு (வேறு எங்கும் எமக்கு கிளைகள் கிடையாது).





# ஜெனீவாவில் நேற்றுக் கவனவீர்ப்பு





இலங்கையில் இடம்பெற்ற யுத்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் இலங்கை அரசாங்கத்துக்கு எதிராக விசாரணைகள் இடம்பெற வேண்டும் என்று கோரி சுவிஸ் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் அலுவலகத்தின் முன்னாள் நேற்றுக் கவனவீர்ப்பு போராட்டம் ஒன்று இடம்பெற்றது. அப்போது எடுக்கப்பட்ட படங்கள்.

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் -kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## சம்பந்தனின் ஊக்கப் பதில்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மூத்த தலைவர் இரா. சம்பந்தன் கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் யதார்த்தமான சில விடயங்களைச் சுட்டிக்காட்டியிருக்கின்றார். அவை நோக்கற்பாலவை.

*"எமது மக்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்றாமையே பின்னடைவுகளுக்குக் காரணமாக இருக்கின்றது. புதிய அரசமைப்பை உருவாக்காமை எமது மக்களுக்கு மிக ஏமாற்றமான விடயமாகும். பொறுப்புக் கூற வேண்டிய விடயங்களும் நிறைவேற்றப்படவில்லை. இப்படிப் பல விவகாரங்கள் எமது மக்களுக்கு ஏமாற்றத்தை அளிப்பனவாக இருந்துள்ளன. அந்த மக்களின் பிரதிநிதிகளான எம்மால் பொறுப்புகூற முடியாத நிலைமைகள் ஏற்பட்டதன் காரணமாகவே அவர்களின் மனதில் சஞ்சல நிலைமை தோன்றியிருந்தது. அதன் வெளிப்பாடாக அவர்களின் முடிவுகள் அமைந்துள்ளன."* – என்று பெரும்பாலும் ஓர் உண்மையான நிலைமையை ஒப்புதலோடு தெரிவித்திருக்கின்றார் சம்பந்தன்.

தென்னிலங்கையின் இருபெரும் கட்சிகளின் தலைவர்களாக இருந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இடையேயான ஒற்றுமையின்மை மற்றும் முரண்பாடுகள் காரணமாக உறுதியளிக்கப்பட்ட விடயங்களை நிறைவேற்ற முடியாமல் போயிற்று என்ற துரதிஷ்ட நிலைமையை சம்பந்தன் விளக்கியுள்ளார். அவரது அந்த விளக்கம் பெரும்பாலும் சரியானதுதான்.

*'அடுத்த தீபாவளிக்குள் தீர்வு'*, *'அடுத்த வருடத்தில் புதிய அரசமைப்பு'* என்றெல்லாம் தமது மக்களுக்குச் சம்பந்தன் உறுதிமொழி கொடுக்கக் கூடியளவுக்கு நம்பிக்கையை ஊட்டிவிட்டு, தமிழர் தரப்பை நட்டாற்றில் அந்தரிக்க விட்டபடி தமக்குள் மோதிக் கொண்டனர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும்.

அந்தக் கைமோசத்துக்கான விளைவை அந்த இருவருமே எதிர்கொள்ளும் அவலம் இன்று அவர்களுக்கு நேர்ந்திருக்கின்றது. இலங்கையின் தேசிய அரசியல் எங்கோ ஓர் மூலைக்குள் தூக்கிக் கடாசப்படும் நிலைமை அவர்களுக்கு ஏற்பட்டுள்ளது.

இதேநேரம் –

தென்னிலங்கையில் சிறுபான்மை இனங்களுக்கு எதிராக – குறிப்பாக தமிழர்களுக்கு எதிராக – பௌத்த, சிங்கள பேரினவாதம் விஸ்வரூப வடிவத்தில் மேலாண்மை பெற்று ஆட்சியதிகார வலுவோடு செல்வாக்குப் பெற்றிருக்கும் இச்சமயத்தில் தமது இனத்தின் எதிர்காலம் என்ன என்ற அச்சம் தமிழ் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது.

*'ஒரு நாடு ஒரு சட்டம்'* என்று கொள்ளைப் பிரகடனம் செய்கின்றார் நாட்டின் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ. ஒரு புறம் அதிகாரப் பரவலாக்கத்துக்கு வழி செய்த 13ஆவது திருத்தம் அடியோடு அகற்றப்படப் போகின்றது என்ற சமிக்ஞைகள் ஆளும் தரப்பிலிருந்து வருகின்றன. மறுபுறம், உயிரிழந்த நமது உறவுகளுக்குக் கூட நினைவேந்தல் செய்ய அனுமதிக்காக அடக்குமுறை கட்டவிழ்கின்றது. நிர்வாக அதிகாரிகள் நியமனத்திலிருந்து வாழ்வியலின் ஒவ்வொரு அங்கத்துக்குள்ளும் சிங்கள இராணுவம் தலையீடு செய்யும் பேரச்ச நிலைமை கட்டவிழ்கின்றது.

இவற்றுக்கு மத்தியிலும் நம்பிக்கை தரும் விதத்தில் உறுதியுடன் கருத்து வெளியிட்டிருக்கின்றார் சம்பந்தன்.

* தமிழர்களுக்கு நியாயமான தீர்வு ஒன்றை வழங்காது, காலத்தைக் கடத்தி, ஏமாற்றி, தட்டிக் கழித்து விட முடியும் என்று அரசு எண்ணக்கூடாது. அப்படிச் செய்ய முயற்சித்தால் அதற்கு மாற்றாக எடுக்கப்பட வேண்டிய வழிகளை நாடுவோம்.
* இந்தியா எம்மைக் கைவிடாது. கைவிடப் போவதும் இல்லை. எமது விடயத்தில் இந்தியாவுக்குத் தார்மீகக் கடமை உண்டு. அந்தக் கடமையை இந்தியா நிச்சயம் நிறைவேற்றும் என்ன நம்பிக்கை எமக்கு உண்டு. இந்திய மத்திய அரசுடன் எங்களுக்கு நீண்ட தொடர்புகளுண்டு. அவற்றைப் பகிரங்கப்படுத்த முடியாது.
* எமது கோரிக்கைகளை ஆட்சித் தரப்பினர் நிராகரித்துச் செல்வார்களாயின் அவர்களை எப்படிக் கையாள வேண்டும் என்பது எமக்குத் தெரியும்.
* ஜெனீவாவில் அளித்த வாக்குறுதிகளில் இருந்து அரசுத் தரப்புத் தப்பிப் பிழைக்க முடியாது. அது அவர்கள் கழுத்தை நெரிக்கப் போகின்றது.

– இத்தகைய போக்கிலே சம்பந்தன் வெளியிட்டிருக்கும் இக்கருத்துக்கள், இன்றைய நிலையில் தென்னிலங்கையின் பேரெழுச்சியினாலும், தமிழர் தரப்பின் தேர்தல் பின்னடைவுகளினாலும் துவண்டு போய் நிற்கும் தமிழினத்துக்கு நம்பிக்கை, தெம்பு, ஊக்கம் தரும் 'டொனிக்' பதில்கள்.

இன்றைய நிலையில் தன் இனத்தை மீள எழுச்சி பெற்று உற்சாகமடைய வைப்பதற்கு இப்படி உறுதியாக – நம்பிக்கையோடு – பதிலளிப்பது மூத்த தலைவரின் பொறுப்புத்தான். அதனையே செய்திருக்கின்றார் சம்பந்தன்.

# முஸ்லிம் மக்களின் அபிலாஷைகளை வென்றெடுக்க அரசுடன் பேசத் தயார்!

## மு.காவின் பிரதித் நஸீர் அஹமட் எம்.பி. தகவல்



முஸ்லிம்களின் அபிலாஷைகளை வென்றெடுப்பதற்காக ஆட்சியில் உள்ள ராஜபக்ஷ அரசுடன் பேச்சுகளை முன்னெடுப்பதற்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தயாராக உள்ளது.

– இவ்வாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவரும் அக்கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஹாபீஸ் நஸீர் அஹமட் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் அடுத்த கட்டச் செயற்பாடுகள் தொடர்பில் வினவிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தற்போதைய தேசிய அரசியல் களம் மிகவும் மாறுபட்டதாக உள்ளது. அதனை நாம் சரியாகக் கையாள வேண்டிய நிலையில் உள்ளோம். அரசுக்கு மூன்றிலிரண்டு பெரும்பான்மை உள்ள நிலையில் எமது சமூகத்தின் உரிமைகளைப் பாதுகாக்க வேண்டியதும் முஸ்லிம்களின் அபிலாஷைகளைப் பெற்றுக்கொடுக்க வேண்டியதும் மிகவும் முக்கிய விடயமாகின்றது.

ஆகவே, அந்த விடயங்கள் தொடர்பாக நாம் யாருடனும் பேச்சுகளை மேற்கொள்வதற்குத் தயாராகவே உள்ளோம். குறிப்பாக முஸ்லிம்களின் அபிலாஷைகளைப் பெற்றுக் கொடுப்பதற்காக நாம் தற்போதுள்ள ராஜபக்ஷ ஆட்சியாளர்களுடன் பேச்சுகளை மேற்கொள்வதற்குத் தயாராகவே இருக்கின்றோம்.

அதேநேரம், அரசு முன்னெடுக்கும் நல்ல விடயங்களுக்கு எமது ஆதரவையும் தெரிவிப்பதோடு எமது சமூகத்துக்குப் பாதகமான விடயங்களை எதிர்ப்பதற்குப் பின்னிற்கவும் போவதில்லை. ஜனநாயகக் கட்டமைப்பான எமது கட்சியில் வெவ்வேறு நிலைப்பாடுகள் காணப்படலாம். ஆனால், எமக்கு ஆணை வழங்கும் மக்களின் நிலைப்பாடுகள், கட்சியின் பெரும்பான்மை அங்கீகார தீர்மானங்களுக்கு அமைவாகவே அனைத்துச் செயற்பாடுகளையும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மேற்கொள்ளும் – என்றார்.

# மீளாய்வுக் குழுவின் அறிக்கை நாடாளுமன்றத்தில் பரிசீலனை

## அமைச்சர் சந்திரசேன உறுதி



கொழும்பு, செப்.22

அரசமைப்பின் 20 ஆவது திருத்தம் தொடர்பில் பிரதமரால் நியமிக்கப்பட்ட மீளாய்வுக் குழுவினர் பரிந்துரைத்த அறிக்கை நாடாளுமன்றத்தின் ஊடாகப் பரிசீலனை செய்யப்படும். இவ்விவகாரத்தால் ஜனாதிபதிக்கும் அரசுக்கும் இடையில் எவ்வித முரண்பாடுகளும் ஏற்படாது. சுமுகமான பேச்சின் ஊடாகக் கருத்து வேறுபாடுகளுக்குத் தீர்வு பெற்றுக்கொள்ளப்படும்.

– இவ்வாறு காணி விவகார அமைச்சர் எஸ். எம். சந்திரசேன தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

20 வது திருத்தம் தொடர்பில் ஆளும் தரப்பின் உறுப்பினர்கள் மத்தியில் மாறுபட்ட கருத்துக்கள் காணப்படுகின்றன. விமர்சனங்கள் இல்லாமல் ஒரு விடயத்தைச் செயற்படுத்தவது சாத்தியமற்றது. பல்வேறு தரப்பினர் பல தரப்பட்ட விமர்சனங்களை இதுவரையில் முன்னைத்துள்ளார்கள்.

19 ஆவது திருத்தத்தால் அரச நிர்வாகத்துக்கு ஏற்பட்ட நெருக்கடிகள் கடந்த அரசை முழுமையாக பலவீனப்படுத்தியது. 20 ஆவது திருத்தத்தால் அரசு பலவீனமடையக் கூடாது என்பதற்காகவே வர்த்தமானியில் வெளியாக ஏற்பாடுகள் மீளாய்வு செய்யப்பட்டுள்ளன. பிரதமருக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள அறிக்கை நாடாளுமன்றத்தின் ஊடாகப் பரிசீலனை செய்யப்படும்.

20 ஆவது திருத்தம் தொடர்பில் ஆளும் தரப்புக்குள் கருத்து வேறுபாடுகள் காணப்படுகின்றன. இவ்வாறான நிலையைள் கொண்டு எதிர்த்தரப்பினர் ஜனாதிபதிக்கும், பிரதமருக்குமிடையில் முரண்பாடுகளைத் தோற்றுவிக்க முயற்சிக்கிறார்கள். இவ்வாறான நிலைமைக்கு ஒருபோதும் இடமளிக்க முடியாது.

இரு தரப்பினருக்கும் இடையிலான கருத்து வேறுபாடுகள் சுமுகமான பேச்சின் ஊடாகத் தீர்க்கப்படும். எக்காரணிகளுக்காகவும் அரசு பலவீனமடையாது. நாட்டு மக்கள் ஜனாதிபதி, பிரதமர் மீது கொண்டுள்ள நம்பிக்கை பாதுகாக்கப்படும் – என்றார்.

# அரசமைப்பு திருத்தத்தை சவாலுக்குட்படுத்துவோம்!

## சஜித் தரப்பு திட்டவட்டம்

20 ஆவது திருத்தச் சட்டமூலத்திற்கு எதிராக நீதிமன்றுக்கு செல்லவுள்ளதாக சஜித் தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று (திங்கட்கிழமை) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதன்போது தொடர்ந்தும் தெரிவித்த அவர் –

நாளை 20ஆவது திருத்தச்சட்டமூலம் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. அன்றிலிருந்து 14 நாள்களுக்கு இதுதொடர்பான வியாக்கியானத்தை தெரிவிக்க காலம் வழங்கப்பட்டுள்ளது.

நாம் இந்தக் காலத்தில் இதற்கெதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்ய எதிர்பார்த்துள்ளோம்.

20 தொடர்பாக சர்வஜன வாக்கெடுப்பொன்று அவசியப்படுகிறது. இதனை முன்னிருத்தியே நாம் நீதிமன்றை நாடவுள்ளோம்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ எப்படியானவர் என்பதற்காக எல்லாம், 20 ஐ நிறைவேற்ற அனுமதியளிக்க முடியாது.

அவர் எப்படிப்பட்டவர் எனும் உண்மை இன்று நாட்டு மக்களுக்கு தெரியவந்துள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.



# சிறு மற்றும் மத்திய தொழிற்துறை பொருளாதாரத்தின் முதுகெலும்பு!

## மஹிந்த ராஜபக்ஷ பெருமிதம்

சிறு மற்றும் மத்திய தொழிற்துறை இன்று நம் நாட்டு பொருளாதாரத்தின் முதுகெலும்பாகக் காணப்படுகின்றது என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் (ஞாயிற்றுக்கிழமை) ஹம்பாந்தோட்டை – மாகம் ருஹுணுபுர சர்வதேச மாநாட்டு மண்டபத்தில நடைபெற்ற 'சிறு மற்றும் நடுத்தர நிறுவன மேம்பாட்டு மாநாடு - 2020' இல் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிகழ்வில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மேலும் கூறியுள்ளவை வருமாறு –

பிராந்திய சிறு மற்றும் நடுத்தர தொழில் மேம்பாட்டு மாநாட்டை ஆரம்பிப்பதற்கு எனக்கு அழைப்பு விடுக்கப்பட்டமை தொடர்பில், சான்றளிக்கப்பட்ட முகாமைத்துவ கணக்காளர்கள் நிறுவனத்தின் தலைவரும் சிறு மற்றும் நடுத்தர தொழில் மேம்பாட்டுக் குழுவின் ஒருங்கிணைப்பாளருமான பேராசிரியர் லக்ஷ;மன் ஆர்.வடவலவுக்கு நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தொழில்முறை நிறுவனங்கள், வர்த்தக சபை, வணிக வங்கிகள் மற்றும் தொழில் வல்லுநர்களை உள்ளடக்கிய இந்நிறுவனத்தின், சிறு மற்றும் நடுத்தர தொழில் மேம்பாட்டுக் குழுவை நிறுவுவது மிகவும் சரியான நேரத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கையாகும். இது உண்மையிலேயே சிறு மற்றும் நடுத்தர தொழில்முனைவோருக்கு மேற்கொள்ளும் ஒரு முக்கியமான சேவையாகும்.

சிறு மற்றும் நடுத்தர தொழில் துறை இன்று நமது பொருளாதாரத்தின் முதுகெலும்பாகும். அது நம் நாட்டின் அனைத்து பிரிவுகளையும் பிரதிநிதித்துவப்படுத்துவது மகிழ்ச்சி அளிக்கிறது.

நமது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 52 சதவீதத்திற்கு இத்துறை பங்களிக்கிறது. இது அனைத்து வேலை வாய்ப்புகளிலும் 45 சதவீதம் ஆகும். மேலும், இத்துறை நாட்டின் மொத்த தொழில்முனைவோரின் எண்ணிக் கையில் 75 சதவீதமாகும்.

நிதி அமைச்சின் கீழ், இலங்கை மத்திய வங்கியின் ஆதரவுடன் கொவிட் – 19 இனால் பாதிக்கப்பட்ட வர்த்தக நடவடிக்கைகளைக் கட்டியெழுப்புவதற்கு ரூபாய் 100 பில்லியன் நிதியை நன்கொடையாக வழங்க முடிந்தமை மகிழ்ச்சியளிக்கிறது.

நாம் கடந்த குறுகிய காலத்திற்குள் கடன்களுக்கு சலுகை வட்டி விகிதங்களை அறிமுகப்படுத்தி, பணி மூல தன தேவைகள் மற்றும் கடன் உத்தரவாதங்கள் மூலம் சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களைப் புதுப்பிக்க நடவடிக்கை எடுத்தோம்.

இந்த மாநாட்டில், முறையான நிதி நிர்வாகம், வணிக மேம்பாட்டுக்கு நிதியை முறையாகப் பயன்படுத்துதல், பயிற்சி மற்றும் திறன் மேம்பாடு, உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைப்படுத்தல், தொழிலாளர் போன்ற முக்கியமான பகுதிகள் உள்ளடக்கப்பட்டிருப்பது தெளிவாகிறது.

சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களின் மூலம் மேற்கொள்ளப்படும் உலக ஏற்றுமதியின் சராசரி சதவீதம் 30 சதவீதமாகும். இருப்பினும், இலங்கையைப் பொறுத்த வரையில் அதில் 5 சதவீதமாகும். இதை அதிகரிக்க ஓர் அரசாங்கமாக எங்கள் ஆதரவை வெளிப்படுத்த இந்த வாய்ப்பைப் பயன்படுத்த விரும்புகிறேன்.

சிறு மற்றும் நடுத்தர தொழிற்துறையின் தயாரிப்புகளை ஏற்றுமதி செய்வதற்கான ஏற்றுமதி மையத்தை நிறுவியமை தொடர்பில் அக்குழுவை நான் வாழ்த்துகிறேன். இலங்கைக்கு மதிப்புமிக்க அந்நிய செலாவணியை சம்பாதிப்பதற்கான இச்செயற்பாட்டுக்கு ஊக்குவிப்பது அரசாங்கம் என்ற வகையில் எமது பொறுப்புகளை நிறைவேற்றுவோம்.

ஹம்பாந்தோட்டை போன்ற மிகவும் க;ட பகுதிகளில் உள்ள சிறு மற்றும் நடுத்தர தொழில்முனைவோர் தொடர்பில் நாங்கள் தொடர்ந்து கவனம் செலுத்துவோம் என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன். – என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# கஜேந்திரகுமார், கஜேந்திரன் மீதும் விசாரணை நடத்தப்பட வேண்டும்!

## கோருகிறார் மணிவண்ணன்



தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் மத்திய குழுவால் தீர்மானிக்கப்பட்டதற்கு அமைய தன் மீது முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளுக்கு விளக்கமளித்து கடிதம் அனுப்பியுள்ள சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணன், கட்சியால் முன்னெடுக்கப்படும் ஒழுக்காற்று விசாரணைக்கு ஒத்துழைப்பேன் என்று திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

அத்தோடு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரான நாடாளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், பொதுச்செயலாளரான் செல்வராஜா கஜேந்திரன் ஆகியோர் மீதும் குற்றச்சாட்டுக்களை முன்வைத்து, அவர்கள் மீதும் விசாரணை நடத்தப்படவேண்டும் என்று சட்டத்தரணி வி.மணிவண்ணன் கேட்டுள்ளார்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் அடிப்படை உறுப்பினர் தகுதி நிலையிலிருந்து சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணனை இடைநிறுத்துவதாக கடந்த 5 ஆம் திகதி அறிவித்த அந்தக் கட்சியின் தலைவர், அதுதொடர்பில் மணிவண்ணனுக்கு கடிதம் அனுப்பியுள்ளார் எனவும் தெரிவித்தார்.

மேலும்,கடிதத்தில் முன்வைக்கப்பட்டுள்ள விடயங்களுக்குப் பதிலளிக்க மணிவண்ணனுக்கு 14 நாள்கள் அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. அதற்குள் அவர் தனது பக்க நியாயங்களை கட்சிக்கு அறிவிக்கவேண்டும். அதன்பின்னர் கட்சியால் அவர் மீது முன்வைக்கப்படும் 6 குற்றச்சாட்டுத் தொடர்பில் ஒழுக்காற்று விசாரணை நடத்தப்படும் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஊடகங்களிடம் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் கட்சியால் அனுப்பப்பட்ட கடிதத்துக்கு சட்டத்தரணி வி.மணிவண்ணன் தனது பதில் கடிதத்தை அனுப்பிவைத்துள்ளார். கட்சியால் முன்னெடுக்கப்படும் ஒழுக்காற்று விசாரணைக்கு ஒத்துழைப்பேன். ஆனால் ஓய்வுபெற்ற நீதிபதி அல்லது ஒழுக்காற்று விசாரணையை நடத்தும் முன் அனுபவமும் கட்சிசாராத சுயாதீன அதிகாரியாக உள்ள குறைந்தது மூவர் கொண்ட குழு முன்னிலையில் விசாரணை நடத்தப்படவேண்டும் என்று கேட்டுள்ளார்.

அத்தோடு தன் மீதான ஒழுக்காற்று விசாரணை பொது மக்கள், ஊடகங்கள் முன்னிலையில் பகிரங்கமாக இடம்பெறவேண்டும் என்றும் சட்டத்தரணி வி. மணிவண்ணன் வலியுறுத்தியுள்ளார்.

# நாடாளுமன்று வருகிறது '20'!

அரசமைப்பின் 20 ஆவது திருத்தச் சட்டமூலம் இன்று (செவ்வாய்க்கிழமை) நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

அதன் பின்னர் அதனை சவாலுக்குட்படுத்தி யாரேனும் உயர்நீதிமன்றத்தைநாடினால்நீதிமன்றம்21நாள்களுக்குள் அதுதொடர்பான தீர்ப்பை தெரிவிக்கவேண்டும் என நாடாளுமன்ற செயலாளர் நாயக அலுவலகம் தெரிவித்துள்ளது.

குறித்த காலப்பகுதியில் இந்த அரசமைப்பு தொடர்பில் எந்தவொரு தீர்மானத்தையும் எடுக்க நாடாளுமன்றத்திற்கு உரிமை இல்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

21 நாள்களுக்கு முன்னர் உயர் நீதிமன்றம் தனது தீர்மானத்தை அறிவித்தால், அதன்பின்னர் 20ஆவது திருத்தம் நாடாளுமன்றத்தில் இரண்டாவது வாசிப்பிற்காக விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும் என நாடாளுமன்ற செயலாளர் நாயக அலுவலகம் தெரிவித்துள்ளது.

இரண்டாவது வாசிப்பு நிறைவடைந்த பின்னர் வாக்கெடுப்பு இடம்பெறவுள்ளதுடன், அதில் நாடாளுமன்றத்தில் மூன்றின் இரண்டு பெரும்பான்மையை பெற்றுக்கொள்ள வேண்டும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

பின்னர் செயற்குழு கூட்டத்தின் போது 20 ஆவது திருத்தத்தின் அனைத்துப் பிரிவுகளை ஒவ்வொன்றாக ஆராய்ந்து திருத்தங்கள் இருப்பின் அதனைத் தெரிவிப்பதற்கு வாய்ப்பு வழங்கப்படும் எனவும் நாடாளுமன்ற செயலாளர் நாயக அலுவலகம் தெரிவித்துள்ளது.

அதனைத் தொடர்ந்து, மூன்றாவது வாசிப்பின்போது வாக்கெடுப்பு இடம்பெறவுள்ளதுடன், அதில் நாடாளுமன்றத்தில் மூன்றின் இரண்டு பெரும்பான்மையை பெற்றுக்கொள்ள வேண்டும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இறுதியாக சபாநாயகர் அரசமைப்பிற்கு கையொப்பமிட்டமையை அடுத்து அது சட்டமாக மாறும் என நாடாளுமன்ற செயலாளர் நாயக அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.







யாழ்ப்பாணம் - நல்லூர் சிவன் கோவில் (அம்மன்) தேர்த் திருவிழா நேற்று(21.09.2020)காலைபக்திபூர்வமாக இடம்பெற்றது.

படங்கள்: ஐ.சிவசாந்தன்

காலைக்கதிர் Kalaikkathir



# ராஜபக்ஷ அரசு ஏமாற்ற முனைந்தால் மாற்று வழியைக் கையிலெடுப்போம்!

## கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் அதிரடி அறிவிப்பு

ஆட்சியில் உள்ள ராஜபக்ஷவினரால் தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யாது, பொறுப்புக்கூறலை செய்யாது எம்மை ஏமாற்றி அனைத்தையும் தட்டிக் கழித்து விட முடியாது. அவ்வாறான போக்கில் செல்வார்களாயின் நாம் மாற்று வழியைக் கையிலெடுப்போம்.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தன் தெரிவித்தார்.

கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு அவர் வழங்கியுள்ள செவ்வியில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

**கேள்வி:-** பொதுத்தேர்தலில் 20ஆசனங்களை இலக்கு வைத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு களமிறங்கியிருந்த போதும் பத்து ஆசனங்களே கிடைத்துள்ளமை யோடு வாக்கு வங்கியும் சரிந்துள்ளது. இந்த நிலைமைகளுக்கான காரணங்களை மீளாய்வு செய்தீர்களா?

**பதில்:-** எமது மக்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்றாமையே பின்னடைவுகளுக்குக் காரணமாக இருக்கின்றது. விசேடமாக, 2015இல் ஆட்சிமாற்றத்தினை நாம் ஏற்படுத்திய போது எமது மக்களின் அபிலாகைளைப் பூர்த்திசெய்யவல்ல அரசியல் தீர்வொன்று கிடைக்கும் என்பதில் முழுமையான நம்பிக்கையுடன் புதிய அரசமைப்பை உருவாக்கும் பணிகளை முன்னெடுத்திருந்தோம்.

துரதிர்ஷ்டவசமாக ஆட்சியை அமைத்திருந்த பிரதான கட்சிகள் இரண்டுக்கும் இடையில் ஏற்பட்ட பிணக்குகள் மற்றும் தலைவர்களுக்கு இடையிலான ஒற்றுமையின்மை ஆகியவற்றின் நிமித்தம் அந்தப் பணிகள் முழுமை பெறவில்லை. எமது மக் களைப் பொறுத்தவரையில் புதிய அரசமைப்பு உருவாக்கப்படாமையானது மிகுந்த ஏமாற்றமான விடயமாகும். புதிய அரசமைப்பொன்று உருவாக்கப்பட்டிருந்தால் தேர்தல் முடிவுகள் வேறுவிதமாக இருந்திருக்கும்.

இதனைவிடவும், எமது மக்களுக்கு பொறுப்புக்கூறவேண்டிய விடயங்களும் முழுமை பெற்றிருக்கவில்லை. அவை மிகவும் சிக்கலுக்குரியவையாக இருந்தாலும் உறுதியளிக்கப்பட்டதன் பிரகாரம் செயற்பாட்டு ரீதியாக முன்னெடுக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால், அரசின் செயற்பாடுகளில் ஏற்பட்ட மந்தநிலைமைகள் காரணமாக காணாமல் ஆக்கப்பட்டவர்கள் விடயம் போன்று பல விடயங்கள் முழுமை பெறாது தடைப்பட்டிருந்தன. இவ்வாறு பல விடயங்கள் எமது மக்களுக்கு ஏமாற்றத்தை அளிப்பவையாகவே இருந்துள்ளன.

அந்த மக்களின் பிரதிநிதிகளான எம்மால் பொறுப்புக்கூற முடியாத நிலைமைகள் ஏற்பட்டதன் காரணமாக அவர்களின் மனதில் சஞ்சலமான நிலைமை தோன்றியிருந்தது. அதன் வெளிப்பாடாகவே அவர்களின் முடிவும் அமைந்திருக்கின்றது.

### துருப்புச் சீட்டுக்களைப் பயன்படுத்த தமிழ்க் கூட்டமைப்புத் தவறியதா?

**கேள்வி:-** 2018 ஒக்டோபரில் அரசியல் சூழ்ச்சி நடைபெறுவதற்கு முன்னதாகவும், அதன் பின்னர் மீண்டும் ஆட்சி அமைக்கப்பட்டபோதும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தம்மிடம் இருந்த துருப்புச் சீட்டுக்களைப் பயன்படுத்தத் தவறியுள்ளதல்லவா?

**பதில்:-** எம்மை எதிர்ப்பவர்கள் அரசியலுக்காக பல்வேறு விதமான விமர்சனங்களை முன்வைக்க முடியும். ஆனால், இன விடுதலைக்கான பயணத்தில் நிரந்தரமான தீர்வை நோக்கிய கருமங்கள் பக்குவமாக முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றபோது அவற்றைக் குழப்பிவிட முடியாது. அனைத்துத் தரப்பினரதும் ஆதரவுடன் புதிய அரசமைப்புச் செயற்பாடுகள் நேர்த்தியான முறையிலேயே இடம்பெற்றுக்கொண்டிருந்தன. அவ்வாறான தருணத்தில் ஒரு சில விடயங்களை மையப்படுத்தி அரசுடன் நாம் முட்டிமோதி மிக முக்கியமான புதிய அரசமைப்பை உருவாக்கும் செயற்பாடுகளைச் சீர்குலைத்துவிட முடியாது. அதற்காகவே நாம் நிதானமாகச் செயற்பட்டு வந்தோம். ஆட்சியில் இருந்த இரு பெரும் கட்சிகளின் தலைவர்களுக்கு இடையில் ஏற்பட்ட குழப்பத்தைக் கட்டுப்படுத்தக்கூடிய நிலை எம்மிடத்தில் இருக்கவில்லை.

தந்தை செல்வா, இந்தத் தீவில் உள்ள தமிழ் மக்களுக்கு நீதியான, சமத்துவமான அந்தஸ்து அரசமைப்பில் வழங்கப்பட வேண்டும் என்பதற்காகவே தமிழரசுக் கட்சியை ஆரம்பித்தார். அவருடைய இலட்சியப் பாதையில் நாம் வெகுதூரம் கடந்து வந்திருக்கின்றோம். அரசியல் தீர்வு விடயத்தில் மக்களின் ஆணையைப் பெற்று பல விடயங்களைக் கையாண்டிருக்கின்றோம். நீண்ட அனுபவங்களை கொண்டிருக்கின்றோம். ஆகவே, அந்தப் பணிகளை இடைநடுவில் கைகழுவிவிட முடியாது. தற்போதும் அந்தப் பணிகளை முன்னெடுக்கத் தயாராகவே உள்ளோம். அதற்கான முன்னெடுப்புக்களை நாம் செய்துகொண்டிருக்கின்றோம். எமது மக்கள் நம்பிக்கையுடன் எம் பின்னால் உறுதுணையாக இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றோம்.

### 'ஒரே நாடு ஒரே சட்டம்' - கோட்பாடு அதிகாரப் பகிர்வுக்கு வழிவிடுமா?

**கேள்வி:-** ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ 9ஆவது நாடாளுமன்ற கொள்கைப் பிரகடன உரையின்போது - ஒரே நாடு ஒரே சட்டம் - என்ற கோட்பாட்டைப் பிரதிபலித்திருக்கும் நிலையில், அதிகாரப் பகிர்வு உள்ளடக்கத்தை மையப்படுத்திய சமஷ்டி அடிப்படையிலான தீர்வொன்றை அடைய முடியும் என்று நம்பிக்கை கொள்கின்றீர்களா?

**பதில்:-** ஜனாதிபதியின் ஒரு சில வார்த்தையின் அடிப்படையில் நாம் தீர்க்கமான முடிவொன்றை எடுத்துவிட முடியாது. இனப்பிரச்சினைக்கான தீர்வு என்ற விடயம் எழுபது ஆண்டுகளாக முன்னெடுக்கப்படும் ஒரு விடயமாக இருக்கின்றது. பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இந்தியா, ஐக்கிய நாடுகள் சபை, மனித உரிமைகள் பேரவை, சர்வதேச நாடுகள் உள்ளிட்ட தரப்புக்களுக்கு பல்வேறு வாக்குறுதிகளை அளித்துள்ளார்கள். விசேடமாக, 13ஆவது திருத்தச் சட்டத்தை முமையாக நடைமுறைப்படுத்துவதோடு அதன் மீது ஆக்கபூர்வமான அதிகாரப் பகிர்வைக் கட்டியெழுப்பி அதனை நடைமுறைப்படுத்துவோம் என்றும் உறுதியளித்திருக்கின்றார்.

இதனைவிடவும், தமிழீழ விடுதலைப்புலிகளை இராணுவ ரீதியாக தோற்கடிப்பதற்கு இந்தியாவிடமும், சர்வதேசத்திடமும் உதவிகளைக் கோரியபோது ராஜபக்ஷவினர் பல வாக்குறுதிகளை வழங்கியிருக்கின்றார்கள். குறிப்பாக, தமிழீழ விடுதலைப்புலிகளுடன் பேச்சு ரீதியான இனப்பிரச்சினைக்குத் தீர்வைக் காண முடியாது, ஆகவே, அவர்களை இராணுவ ரீதியாக தோற்கடித்ததன் பின்னர் அரசியல் பிரதிநிதிகளுடன் பேச்சுகளை மேற்கொண்டு அதியுச்ச அதிகாரப் பகிர்வுடனான அரசியல் தீர்வை வழங்குவோம் என்றும் வாக்குறுதி அளித்துள்ளார்கள்.

அவ்விதமாக அளிக்கப்பட்ட வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை. அந்த வாக்குறுதிகளை நிறைவேற்றாது தொடர்ந்தும் இருக்க முடியாது. அந்த அடிப்படையில், ஜனாதிபதியின் ஒவ்வொரு வார்த்தைக்கும் நான் பதிலளித்துக் கொண்டிருக்க முடியாது. ஆனால், புதிய அரசமைப்பு உருவாக்கப்படுகின்றபோது, தற்போதைய ஆட்சியாளர்கள் வழங்கிய வாக்குறுதிகளின் அடிப்படையில், தமிழ் மக்களின் நீண்டகால அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யும் வகையிலான தீர்வை முன்வைக்க வேண்டியது அவர்களின் கடமையாகின்றது.

### எம்மை ஏமாற்ற முடியாது

**கேள்வி:-** மூன்றிலிரண்டு நாடாளுமன்றப் பெரும்பான்மையை தம்வசம் கொண்டிருக்கின்ற தற்போதைய ஆட்சியாளர்கள் தமிழர்களின் அதியுச்ச அதிகாரப்பகிர்வு கோரிக்கைகள் தொடர்பில் கரிசனை கொள்வார்கள் என்று எதிர் பார்க்க முடியுமா?

**பதில்:-** தற்போதைய ஆட்சியாளர்கள் எம்முடன் பேச்சுகளை நடத்துவதற்கே தயக்கம் காட்டுகின்றார்கள். எம்மை இலகுவாக ஏமாற்ற முடியாது என்பதே அதற்கான அடிப்படைக் காரணமாகின்றது. எமது மக்களின் அபிலாஷைகள் தொடர்பாக நாம் தெளிவாக இருக்கின்றோம். ஆகவே, ஆட்சியாளர்களே தமது நிலைப்பாட்டினை வெளிப்படுத்த வேண்டியவர்களாக உள்ளார்கள்.

மேலும்,தற்போதைய நிலையில் இந்த நாட்டில் அனைத்து மக்களும் ஏற்றுக் கொண்ட அரசியல் சாசனம் ஒன்று இல்லை. தேசியத் தேர்தல்களில் 1978ஆம் ஆண்டின் அரசியல் சாசனத்தினை நிராகரித்துத் தீர்ப்பளித்துள்ளார்கள். ஆகவே, புதிய அரசமைப்பொன்று அவசியமாகின்றது. அதுமட்டுமன்றி பொருளாதாரம், ஜெனிவா விவகாரம் என்று பலவிதமான பிரச்சினைகளுக்கு அரசு முகங்கொடுக்க நேரிட்டுள்ளது.

ஆகவே, தமிழ் மக்களுக்கு நியாயமான தீர்வொன்றை வழங்காது காலத்தைக் கடத்தி, ஏமாற்றி, தட்டிக்கழித்து விட முடியும் என்று எண்ணக்கூடாது. அவ்விதமான போக்கில் ஆட்சியாளர்கள் செல்ல விழைவார்களாக இருந்தால் அதற்கு மாற்றாக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளை எடுப்பதற்குரிய வழிகளில் செல்வதற்கு நாங்கள் வலிந்து தள்ளப்படுவதைத் தவிர்க்க முடியாது.

### இருபதை எதிர்ப்போம்

**கேள்வி:-** அரசமைப்பின் 20ஆவது திருத்தச் சட்ட வரைவு நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ள நிலையில் அதுபற்றி எவ்விதமான நடவடிக்கைகளை எடுக்கவுள்ளீர்கள்?

**பதில்:-** ஜனநாயகப் பண்புகளை நிலைநிறுத்துவதற்கான கட்டமைப்புக்களை சிதைப்பதற்கும், அதிகாரங்களைக் குவிப்பதற்கும் நாம் ஒருபோதும் துணைபோக மாட்டோம். எமது எதிர்ப்புக்களை வெளிப்படுத்துவோம்.

**கேள்வி:-** 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தவதற்கும், மாகாண சபை முறைக்கும் எதிரான கருத்துக்கள் அரசுக்குள்ளிருந்தே வெளிக்கிளம்பியுள்ளதே?

**பதில்:-** அவர்கள் பலவிதமான கருத்துக்களை வெளியிடுகின்றார்கள். ஆனால், கொள்கை ரீதியாக எவ்விதமான தீர்க்கமான முடிவுகளையும் அறிவிக்கவில்லையே.

### இந்தியா எம்மைக் கைவிடாது

**கேள்வி:-** இந்த விடயம் சம்பந்தமாக இந்தியத் தரப்பின் நிலைப்பாடு எவ்வாறு உள்ளது? இந்தியத் தூதுவருடனான அண்மைய சந்திப்பில் வெளிப்படுத்தப்பட்டதா?

(07 ஆம் பக்கம் பார்க்க)




# ராஜபக்ஷ அரசு ஏமாற்ற முனைந்தால் மாற்று வழியைக் கையிலெடுப்போம்!

## கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் அதிரடி அறிவிப்பு

(06ஆம் பக்கத் தொடர்ச்சி)

**பதில்:-** நாங்கள் பலவிடயங்கள் தொடர்பில் அவர்களுடன் கலந்துரையாடினோம். இந்தியா எம்மைக் கைவிடாது. இந்தியா எம்மைக் கைவிடப்போவதும் இல்லை. எமது விடயத்தில் இந்தியாவுக்குத் தார்மீக கடமை இருக்கின்றது. ஆகவே, அந்தக் கடமையை இந்தியா நிச்சயமாக நிறைவேற்றும் என்ற நம்பிக்கை எனக்குள்ளது.

**கேள்வி:-** இந்தியத் தூதுவருடனான கலந்துரையாடல்களுக்கு அப்பால் சென்று ஆதிக்கம், அழுத்தம் செலுத்தவல்ல இந்திய மத்திய அரசு தரப்புக்களுடன் பேச்சுகளை நடத்துவதற்கான அணுகுமுறைகளை செய்கின்றீர்களா?

**பதில்:-** எங்களுக்கு மத்திய அரசுடன் நீண்ட தொடர்புகள் இருக்கின்றன. ஆகவே, அந்த விடயங்களை உங்களுடன் பகிரங்கமாக பகிர முடியாது.

**கேள்வி:-** ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு நீங்கள் இரண்டு கடிதங்களை அனுப்பியுள்ளபோதும் அதற்கு ஆகக்குறைந்தது கடிதம் கிடைத்தது என்ற பதிலளிப்பாவது கிடைக்கவில்லையே?

**பதில்:-** எனது கடிதங்களுக்கு அவரால் பதிலளிக்க முடியாது. அந்தக் கடிதத்தில் உண்மையான சான்றாதாரங்களுடன் விடயங்கள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. அதில் கூறப்பட்டுள்ள நியாயங்களுக்கு அவர்களால் பதில் கூறவே முடியாது. அந்தக் கடிதத்திற்கு பதிலளிக்காது இருப்பதால் தமக்கு நன்மையென்று அவரால் கருதமுடியாது. அவர் பதிலளிக்காமல் இருப்பது எமக்கே பலமாகும். அந்தக் கடிதத்தின் பிரதிகள் சகல தூதரகங்கள் ஊடாக சர்வதேசம் வரையில் சென்றுவிட்டன. ஆகவே, ஜனாதிபதி அக்கறை செலுத்தாமல் இருப்பதால் அந்த விடயங்கள் மழுங்கி விடாது. எனது மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் நான் தொடர்ந்தும் கடிதம் எழுதுவேன்.

**கேள்வி:-** கடிதங்களுக்கே பதிலளிக்காதவர்கள் தமிழ் மக்களின் அபிலாஷைகள் தொடர்பில் பதிலளிப்பார்களா?

**பதில்:-** எமது நியாயமான கோரிக்கைகளை அவர்களால் நிராகரித்துச் செல்ல முடியாது. அவ்வாறு செல்ல விளைந்தால் அதனை எப்படிக் கையாள வேண்டும் என்பது எமக்குத் தெரியும்.

### கூட்டமைப்பின் நெகிழ்வுப்போக்கினால் ஐ.நா. தீர்மானங்கள் நீர்த்துப்போயினவா?

**கேள்வி:-** 2015ஆம் ஆண்டுக்குப்பின்னரான சூழலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நெகிழ்வுப்போக்கினாலேயே அரசின் பொறுப்புக்கூறல் பற்றிய ஐ.நா. தீர்மானங்கள் நீர்த்துப்போனதோடு தீர்மானத்திலிருந்து அரசு வெளியேறும் அறிவிப்புக்கும் வித்திட்டுள்ளது எனக் கூறப்படுகின்றதே?

**பதில்:-** எமக்குஎதிரானதரப்பினரேஇத்தகையகருத்துக்களைமுன்வைத்துள்ளார்கள். அவர்கள் அரசியல் இலாபமடைவதற்காகவே இத்தகைய கருத்துக்களை கூறுகின்றார்கள். ஜெனிவாவில் இலங்கை அரசின் பொறுப்புக்கூறலை வலியுறுத்தித் தீர்மானம் நிறைவேற்றுவதற்கு நாங்களே காரணமாக இருக்கின்றோம். 2011ஆம் ஆண்டு அமெரிக்கா சென்றிருந்த நாம், அமெரிக்க இராஜாங்க திணைக்கத்துக்குச் சென்று உயர் அதிகாரிகளைச் சந்தித்து விடயங்களைத் தெளிவுபடுத்தி தீர்மானத்தைக் கொண்டுவருவதற்கு வித்திட்டிருந்தோம்.

அதன் பின்னர் இராஜாங்கப் பிரதிச் செயலாளர் றொபேர்ட் ஓ பிளேக் இலங்கைக்கு வந்து என்னையும், சுமந்திரனையும் சந்தித்தபோது முதன்முதலாக தீர்மானம் கொண்டுவருவதையும் உறுதிப்படுத்திச் சென்றிருந்தார்.

அதனைத்தொடர்ந்து நாம் ஜெனிவா விடயத்தில் அதீத கரிசனையுடன் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றோம். நாங்கள் பொறுப்புக்கூறலைச் செய்வதற்கு விட்டுக் கொடுப்புக்களைச் செய்யவில்லை.

அடுத்த வருடம் மார்ச் மாதம் நடைபெறும் 46ஆவது கூட்டத்தொடர் மிகவும் முக்கியமானது. ஜெனிவாவில் அளித்த வாக்குறுதியிலிருந்து அவர்கள் தப்பிப்பிழைக்க முடியாது. அந்தத் தீர்மானங்களிலிருந்து வெளியேறவும் முடியாது. ஆகவே, அடுத்த கூட்டத்தொடர் அரசுக்கு அழுத்தங்களை அளிப்பதாகவே அமையப்போகின்றது. அதற்கு முன்னதாக அவர்கள் வாக்குறுதி அளிக்கப்பட்ட விடயங்களை உடன் ஆரம்பிக்க வேண்டியவர்களாக இருக்கின்றார்கள்.

### அரசு தட்டிக்கழிக்க முடியாது

**கேள்வி:-** தற்போது ஆட்சியில் உள்ளவர்கள் வாக்குறுதிகளை கடந்த அரசே வழங்கியதென்றல்லவா கூறுகின்றார்கள்?

**பதில்:-** அவர்களால் அவ்வாறு கூறி தட்டிக்கழிக்க முடியாது. நாங்கள் ஜனநாயகவாதிகள். அனைத்து தருணங்களிலும் முட்டிமோதி விடயங்களை சாதிக்க முடியாது. நாங்கள் உரிய தருணங்களில் சரியான நகர்வுகளை செய்து, விடயங்களைச் சரியான பாதையில் செல்ல வேண்டும் என்பதற்காக பக்குவமாக கையாள்வோம். அதனைப் பலர் அறிந்திருப்பதில்லை.

### தேர்தல் பின்னடைவுகளுக்கு சுமந்திரன்தான் காரணமா?

**கேள்வி:-** நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பின்னடைவுகளுக்கு ஊடகப் பேச்சாளராகச் செயற்பட்டுக்கொண்டிருக்கும் எம்.ஏ.சுமந்திரன்தான் காரணமாக இருக்கின்றார் என்று பங்காளிக்கட்சிகளே குற்றம் சாட்டியிருக்கின்றார்களே?

**பதில்:-** சுமந்திரன் இலங்கைத் தமிரசுக் கட்சியையோ, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையோ வழிநடத்தவில்லை. ஆகவே, அவரால்தான் பின்னடைவுகள் ஏற்பட்டன என்பதை ஏற்றக்கொள்ள முடியாது. அவர் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர். ஜனாதிபதி சட்டத்தரணி. அவருக்கு தனது கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கு முழுமையான உரித்துண்டு. எல்லாச் சூழலிலும் எல்லோருடைய கருத்துக்களும் அனைவருக்கும் ஏற்புடையனவாக அமையும் என்று எதிர்பார்க்க முடியாது. ஆனால், ஜனநாயகக் கட்டமைப்பான எமது கட்சியில் அடிப்படைக் கருத்தில் முரண்பாடுகள் இல்லை. அந்த விடயத்தில் ஒற்றுமையான நிலைமையே தொடருகின்றது.

**கேள்வி:-** தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர், கொறாடா பதவிகளை மாற்றுவதற்கு நீங்கள் கொள்கை அளவில் இணங்கியுள்ளீர்களா?

**பதில்:-** புதிய நாடாளுமன்றத்தில் புதிய நாடாளுமன்றக் குழுவே உள்ளது. ஆகவே, புதிய தெரிவுகள் இடம்பெறுவது வழமையானது. அதில் எவ்விதமான பதவி நிலைகள் அமையப்போகின்றன என்பதை நாடாளுமன்றக் குழுவே தீர்மானிக்கும்.

### தேசியப் பட்டியல் விவகாரம்

**கேள்வி:-** தேசியப் பட்டியல் விவகாரத்தில் கட்சியின் தலைவருக்குத் தெரியாது முடிவுகள் எடுக்கப்பட்டமைக்கான காரணம் என்ன?

**பதில்:-** தேசியப்பட்டியல் ஆசன விவகாரம் தற்போது முடிவுக்கு வந்திருக்கின்றது. ஆகவே, நீங்கள் முடிந்த விடயத்தைப் புதிப்பித்து விடாதீர்கள்.

**கேள்வி:-** ஆனால் தேசியப் பட்டியல் ஆசனத் தெரிவு இடம்பெற்ற முறைமை தவறு என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழுவில் பெரும்பான்மை உறுப்பினர்கள் குற்றம் சாட்டியுள்ளார்கள் அல்லவா?

**பதில்:-** இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழுவில் அம்பாறைக்கு ஆசனம் வழங்கப்பட்டதை யாரும் எதிர்க்கவில்லை. மாவை.சேனாதிராஜாவே எதிர்க்கவில்லை. ஆனால், தெரிவு முறைமை சம்பந்தமாக வருத்தம் தெரிவித்தார்கள். தற்போது அந்த விடயம் முடிவுக்கு வந்து நிலைமை சுமுகமாகி விட்டது.

**கேள்வி:-** இந்த நிகழ்வுக்குப் பின்னர் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் பதவி விலகியுள்ளரே?

**பதில்:-** அவர் தனிப்பட்ட காரணங்களுக்காகவே பதவி விலகியுள்ளார் என்று கூறியுள்ளார். அவர் கடந்த காலத்தில் கட்சிக்காக அர்ப்பணிப்பாகச் செயற்பட்டுள்ளார். இந்தநிலையில் புதிய செயலாளர் பொதுச் சபைக் கூட்டத்தில் தெரிவு செய்யப்படுவார்.

### தமிழ்த் தேசியக் கட்சிகளின் ஒற்றுமைக்கான அழைப்பு

**கேள்வி:-** தேர்தல் நிறைவடைந்த கையோடு தமிழ்த் தேசியக் கட்சிகளின் மக்கள் பிரதிநிதிகளை ஒருங்கிணைந்து செயற்படுவதற்கு உங்களால் விடுக்கப்பட்ட அழைப்புக்கு சில நிபந்தனைகளும், விமர்சனங்களும் முன்வைக்கப்பட்டுள்ள நிலையில் அந்தத் தரப்புக்களுடன் பேசுவதற்கு தயாராக உள்ளீர்களா?

**பதில்:-** ஒற்றுமையாகச் செயற்படுவதற்கு அவர்கள் முன்வராது விட்டால் அதனை ஒரு காரணமாக வைத்து அவர்களுடன் நாம் பகைத்துக்கொள்ள வேண்டியதில்லை. ஆகவே, நாம் பிரிவினையை வளர்க்காது ஒற்றுமையை வளர்ப்போம்

**கேள்வி:-** தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலும், தமிழரசுக் கட்சியிலும் அடுத்த பரம்பரையினரிடத்தில் பொறுப்புக்களை ஒப்படைப்பதற்கான சூழல் எப்போது ஏற்படப்போகின்றது?

**பதில்:-** இதனை நான் தீர்மானிக்க முடியாது. கட்சியும் மக்களுமே தீர்மானிப்பார்கள். என்னைப் பொறுத்தவரையில் எதிர்காலத் தலைவர்களுக்குப் பக்க பலமாக இருந்து முழுமையான ஒத்துழைப்புக்களை வழங்கத் தயாராகவே உள்ளேன்.

காலைக்கதிர் Kalaikkathir

# மக்களின் தூரநோக்கற்ற வாக்களிப்பே நாட்டின் இந்த நிலைமைக்கு காரணம்

## குற்றஞ்சாட்டுகிறார் சஜித்



கொழும்பு, செப்.22

பெரும்பான்மையான மக்கள் தூர நோக்கோடு சிந்தித்து வாக்களித்தி ருப்பார்களானால், நாட்டுக்கு இன்று இந்த நிலைமை ஏற்பட்டிருக்காது என எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குறிப் பிட்டார்.

அம்பலாங்கொட பிரதேசத்தில் இடம் பெற்ற நிகழ்வொன்றை அடுத்து ஊடகங் களுக்கு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அந்த ஊடக சந்திப்பில் சஜித் பிரேமதாஸ மேலும் கூறியுள்ளவை வருமாறு -

நாம் 20 ஆவது திருத்தச்சட்டத்தை என்றும் ஏற்றுக் கொள்ளப்போவதில்லை. இதனை தோற்கடிக்கத் தேவையான அனைத்து ஜனநாயக வழிமுறைகளை யும் மேற்கொள்வோம்.

மக்கள் இதற்காக அரசாங்கத்துக்கு வாக்களிக்கவில்லை. எனினும், அரசாங் கம் இதனை மறந்துதான் தற்போது செயற் பட்டு வருகிறது. எவ்வாறாயினும், எதிர்க் கட்சி எனும் ரீதியில் நாம் 20 இற்கு எதிராக எம்மால் முடிந்த அனைத்து செயற்பாடு களையும் மேற்கொள்வோம்.

அத்தோடு, ஐக்கிய மக்கள் சக்தியின் அரசியல் பயணம் தற்போது உறுதியாக வுள்ளது. இந்தப் பயணத்தில் யார் வேண்டு மானாலும் இணையலாம். எமது கதவு கள் திறந்து தான் காணப்படுகின்றன.

ஐக்கிய நாட்டுக்குள் பௌத்தத்திற்கு முன்னுரிமை கொடுத்து, அதேநேரம் ஏனைய மதங்களுக்கும் சம உரிமைக் கொடுத்து ஓர் ஆட்சியை ஸ்தாபிக்க வேண் டும் என்பதுதான் எமது நோக்கமாகும்.

ஐக்கிய மக்கள் சக்தி என்பது மிகவும் புதிய கட்சியாகும். பொதுத் தேர்தலின் போது எமக்கு சரியான முறையில் அமைப் பாளர்கள் கூட இருக்கவில்லை.

இந்த நிலையில்தான் இவ்வாறான வெற்றியைப் பெற்றுக் கொண்டுள்ளோம். தற்போதுதான் கட்சியைப் பலப்படுத்தும் செயற்பாடுகளை மேற்கொண்டு வருகி றோம். 54 நாடாளுமன்ற உறுப்பினர் கள் இன்று உள்ளார்கள். இது உண்மை யில் புரட்சி என்று தான் கூறவேண்டும்.

இப்படியான எமது பலத்தைப் பயன் படுத்தி 20 இற்கு எதிராக மட்டுமன்றி, சுற்றாடல் அழிப்பு, அத்தியாவசியப் பொருள் களின் விலை ஏற்றம், பொருளாதார வீழ்ச்சி உள்ளிட்ட அனைத்துக்கு எதிராக வும் செயற்படுவோம்.

மக்கள் கொஞ்சம் தூரநோக்கோடு சிந்தித்து வாக்களித்திருப்பார்களானால், அரசாங்கத்துக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை கிடைத்திருக்காது.

எவ்வாறாயினும், எதிர்க்கட்சி எனும் ரீதியில் நாம் அனைத்து மக்களுக்காகவும் செயற்படுவோம். - என அவர் குறிப்பிட் டுள்ளார்.

# களனியில் போக்குவரத்து மத்திய நிலையம் அமைப்பு!

## அரசு தீர்மானம்



களனிவெளி ரயில் மார்க்கத்தில் பலநோக்கு போக்குவரத்து மத்திய நிலையத்தை அமைக்க அர சாங்கம் தீர்மானித்திருப்பதாக அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்துள்ளார்.

களனிவெளி ரயில் பாதையில் இடம்பெற்ற சிரம தான நிகழ்வொன்றில் கலந்துகொண்ட போதே அமைச் சர் இவ்வாறு தெரிவித்தார். தனிப்பட்ட வாகனங்களில் வரும் பிரயாணிகளுக்கு அந்த வாகனங்களைப் பாதுகாப்பான இடங்களில் நிறுத்திவிட்டுத் தமக்கான சேவையை நிறைவேற்றுவதற்காக ரயில் அல்லது பஸ் மூலம் கொழும்பிற்கு பயணிக்கக்கூடிய வகையில் இந்த நிலையம் அமைக்கப்படும் என்றும் குறிப்பிட்டார்.

# முஸ்லிம் அரசியல்வாதிகளை பகைக்க மைத்திரிக்குப் பயம்!

## முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஹேமசிறி பெர்ணான்டோ

ஐ.எஸ். அமைப்பில் இணைந்து கொண்டவர்களுக்கு எதிராக எந்த உடனடி நடவடிக்கைகளையும் எடுக்கவேண்டாம் என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார் என முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஹேமசிறி பெர்ணான்டோ குறிப்பிட்டுள்ளார்.

அத்தோடு முஸ்லிம் அரசியல் வாதிகளுடன் பிரச்சினைகளை உருவாக்குவது தொடர்பாக சிறிசேன அச்சம் கொண்டிருந்தார் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டுள்ள ஜனாதிபதி ஆணைக்குழுவின் முன் னிலையில் சாட்சியமளிக்கை யிலேயே அவர் இதனைத் தெரிவித் துள்ளார்.

முஸ்லிம் அரசியல்வாதிகளுடன் பிரச்சினைகளை உருவாக்குவது தொடர்பாக சிறிசேன அச்சம் கொண் டிருந்தார் என்றும் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்ட இஸ்லாமிய போதகர்களுக்கு எதிராக எந்த நடவ டிக்கைகளையும் எடுக்கவேண்டாம் என அவர் வேண்டுகோள் விடுத்தார் எனவும் முன்னாள் பாதுகாப்பு செய லாளர் தெரிவித்துள்ளார்.

ஐ.எஸ், அல் குவைதா போன்ற அமைப்புகளுடன் தொடர்புகளைப் பேணுபவர்களுக்கு எதிராக நடவ டிக்கை எடுக்குமாறு தான் முன்னாள் ஜனாதிபதியைக் கேட்டுக்கொண்ட மையோடு, அவ்வாறான அமைப் புகளிடம் ஆயுத பயிற்சியைப் பெற்று நாடு திரும்பியவர்களுக்கு எதிரான வும் நடவடிக்கை எடுக்குமாறு வேண்டுகோள் விடுத்ததாக எனவும் ஹேமசிறி பெர்ணான்டோ தெரி



வித்துள்ளார்.

எனினும் அவர், அவ்வாறான நடவடிக்கைகளால் முஸ்லிம் அரசி யல்வாதிகளுடன் பிரச்சினைகள் ஏற்படும் எனத் தெரிவித்தமையோடு, உடனடி நடவடிக்கைகள் எதுவும் எடுக்கவேண்டாம் என உத்தரவிட் டார் எனவும் முன்னாள் பாதுகாப்பு செயலாளர் ஹேமசிறி பெர்ணான்டோ குறிப்பிட்டுள்ளார்.

# பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் கொழும்பு வந்தார் பிள்ளையான்!

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி யின் தலைவரும் முன்னாள் கிழக்கு மாகா ணசபை முதலமைச்சரும் தற்போதைய



நாடாளுமன்ற உறுப்பினரு மான பிள்ளை யான் என அழைக்கப்படும் சிவனேசதுரை சந்திரகாந்தன் பலத்த பாதுகாப் புக்கு மத்தியில் கொழும்புக்கு அழைத்து வரப் பட்டுள்ளார்.

இன்றுநடை பெறவுள்ள நாடாளுமன்ற அமர்வில் கலந்து கொள்வதற்காகவே நேற்று (திங்கட்கிழமை) சந்திரகாந்தன் இவ்வாறு அழைத்து வரப் பட்டுள்ளார்.

ஜோசப்பரராஜசிங்கம் கொலை வழக்கில் சந்தேகத்தின் பேரில் 2015ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டு மட்டக்களப்பு சிறைச் சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட் டுள்ள சந்திரகாந்தன், விசேட அதிரடிப்படை யினரின் பலத்த பாதுகாப்புடன் இவ்வாறு அழைத்து வரப்பட்டுள்ளார்.

இவர் அண்மையில் நடைபெற்ற நாடா ளுமன்ற தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத் தில் அதிகூடிய விருப்பு வாக்குகளைப்பெற்று நாடாளுமன்றம் தெரிவுசெய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

# மஹிந்தவின் புதிய வாரிசுக்கு குதூகலமான வரவேற்புகள்!





மஹிந்த ராஜபக்ஷவின் மகனும் விளையாட்டுத்துறை மற்றும் இளை ஞர் விவகார அமைச்சருமான நாமல் ராஜபக்ஷவின் மனைவி கடந்த வாரம் ஆண் குழந்தை யொன்றைப் பெற்றெடுத்திருந்தார்.

இந்நிலையில் கடந்த ஞாயிற்றுக் கிழமை நாமல் ராஜபக்ஷ, தனது மகனையும் மனை வியையும் அழைத்துக் கொண்டு அவரது இல்லத் துக்கு சென்றுள்ளார்.

இதன்போது, புதிய வாரிசுக்கு அவரது இல்லத் தில் குதூகல வரவேற்பு அளிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு நவலோக வைத் தியசாலையில் மகன் பிறந் தமையையடுத்து நேற்றுமுன்தினம் வைத்தியசாலையில் இருந்து மனை வியையும் மகனையும் நாமல் ராஜ பக்ஷ, வீட்டுக்கு அழைத்து சென் றுள்ளார்.

# 764 இலங்கையர்கள் நாடு திரும்பினார்கள்

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக வெளிநாடுகளில் சிக்கித் தவிக்கும் இலங்கையர்களை நாட் டுக்கு அழைத்து வரும் நடவடிக்கை தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

அதன் தொடர்ச்சியாக கட்டார், ஐக்கிய அரபு இராச்சியம், ஆஸ்திரே லியா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுக ளில் இருந்து மேலும் 764 இலங் கையர்கள் நாடு திரும்பியுள்ளனர்.

அதன்படி கட்டார் தோஹாவி லிருந்து நேற்றுமுன்தினம் இரவு 39 இலங்கையர்கள் கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

மேலும் டுபாயில் இருந்து 413 இலங்கையர்களும் ஜப்பானின் நரிட் டாவிலிருந்து 18 இலங்கையர்களும் ஆஸ்திரேலியாவின் மெல்போர்னில் இருந்து 294 இலங்கையர்களும் நேற்று (திங்கட்கிழமை) காலை நாட்டை வந்தடைந்தனர்.

இவ்வாறு விமான நிலையத்தை வந்தடைந்த அனைவருக்கும் பி.சி. ஆர். பரிசோதனை மேற்கொள்ளப் பட்டது.

அதன் பின்னர், அவர்கள் அனை வரும் தனிமைப்படுத்தல் நிலையங்க ளுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# தேசியசுதந்திரம், இறையாண்மையைப் பாதுகாக்கும் இலங்கையின் தீர்மானத்துக்கு பாராட்டுகிறது எகிப்து!

கொழும்பு, செப். 22

தேசிய சுதந்திரத்தையும் இறையாண்மையையும் பாதுகாப்பதற்கு முன்னுரிமை வழங்குகின்ற இலங்கையின் தீர்மானத்தை வரவேற்பதாக எகிப்து தெரிவித்துள்ளது.

இலங்கைக்கான எகிப்திய தூதுவர் ஹுசைன் அல் சஹாரிடி, வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தனவை சந்தித்துக் கலந்துரையாடியமையுடன் கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தியமைக்கு இலங்கைக்குப் பாராட்டையும் தெரிவித்தார்.



மேலும், இந்தச் சந்திப்பில் இரு நாடுகளுக்கும் இடையில் நீண்டகாலமாகப் பேணப்பட்டுவரும் இருதரப்பு நல்லுறவு தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டதுடன் 1957ஆம் ஆண்டில் இலங்கையுடன் தனது இராஜதந்திரத் தொடர்புகளை ஆரம்பித்த முதலாவது ஆபிரிக்க அரேபிய நாடாக எகிப்து விளங்கியமை தொடர்பாகவும் நினைவுகூரப்பட்டது.

இதன்போது, தற்போதைய சூழ் நிலையில் இரு நாடுகளுமே அடிப்படைவாதம், கொரோனா பரவலின் பின்னரான பொருளாதார நெருக்கடிநிலை, சுற்றுலாப் பயணத்துறையின் பின்னடைவு, காலநிலை மாற்றம், போதைப் பொருள் மற்றும் ஆட்கடத்தல் போன்ற ஒரேவிதமான சவால்களை எதிர்கொண்டிருப்பதாக அமைச்சர் தினேஷ் குணவர்தன சுட்டிக்காட்டினார்.

இந்நிலையில், அவற்றை முறியடிப்பதில் இரு நாடுகளும் ஒன்றிணைந்து பணியாற்றுவதற்கான தனது விருப்பத்தை அமைச்சர் எகிப்திய தூதுவரிடம் வெளிப்படுத்தினார்.

## தனிமைப்படுத்தலில் இருந்து 136 பேர் வீடு திரும்பினார்கள்

கொழும்பு, செப். 22

கொரோனா தனிமைப்படுத்தல் காலத்தை நிறைவு செய்த மேலும் 136 பேர், நேற்று (திங்கட்கிழமை) தனிமைப்படுத்தல் நிலையங்களிலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர் என்று தகவல் வெளியாகியுள்ளது.

கந்தகாடு, பியாகாமா மற்றும் நீர்கொழும்பு ஆகிய இடங்களில் உள்ள தனிமைப்படுத்தப்பட்ட நிலையங்களில் உள்ளவர்களே இவ்வாறு வீடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதுவரை 43 ஆயிரத்து 684 பேர், கட்டாய தனிமைப்படுத்தப்பட்ட காலத்தை நிறைவு செய்துள்ளனர். தற்போது 6 ஆயிரத்து182 பேர் 66 தனிமைப்படுத்தப்பட்ட நிலையங்களில் தொடர்ந்தும் தனிமைப்படுத்தலில் உள்ளனர் எனக் கொவிட்–19 தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையம் சுட்டிக்காட்டியுள்ளது.

இதேவேளை கொரோனா வைரஸ் தொற்றாளர்களை அடையாளம் காண நேற்றுமுன்தினம் மாத்திரம் 1,785 பி.சி.ஆர்.சோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அந்தவகையில் நாட்டில் இதுவரை 2 லட்சத்து 68 ஆயிரத்து 371 பி.சி.ஆர் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளானவர்களின் மொத்த எண்ணிக்கை மூவாயிரத்து 287 ஆக அதிகரித்துள்ளது.

மேலும், இதுவரை மூவாயிரத்து 88 பேர் பூரணமாகக் குணமடைந்து வீடுகளுக்கு திருப்பியுள்ளனர். இந்நிலையில், இன்னும் 186 பேர் தொடர்ந்து வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்றுவருகின்றமையுடன் நாட்டில் 13 பேர் வைரஸ் தொற்றால் மரணித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வெளிநாட்டில் பணிபுரியும் தொழிலாளருக்கு சலுகை!

கொரோனா தாக்கத்தால் தமது தொழில்களை இழந்து நிர்க்கதிக்குள்ளாகியுள்ள, வெளிநாடுகளில் பணிபுரியும் இலங்கைத் தொழிலாளர்களுக்கு மீண்டும் அதே நாட்டில் தொழில்களைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

இதற்கான புதிய நடைமுறையொன்று கடந்த 15 ஆம் திகதி முதல் ஆரம்பமாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், இது தொடர்பாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனங்களுக்கு சுற்றறிக்கை மூலம் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்த திட்டத்தின் மூலம், கொரோனா தாக்கத்தால் தமது தொழில்களை இழந்து நிர்க்கதிக்குள்ளாகியுள்ள மற்றும் தமது ஒப்பந்தக் காலம் நிறைவுற்ற நிலையில் நாடு திரும்ப முடியாத நிலையில் காணப்படும் இலங்கைத் தொழிலாளர்களுக்கு மீண்டும் தொழில்களைப் பெற்றுக் கொள்ள முடியும் எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கடல் ஆமை இறைச்சியை வைத்திருந்த நால்வரும் நாளை வரை விளக்கமறியலில்!

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,செப்.22

குருநகர்ப்பகுதியில் கடல் ஆமையை இறைச்சி ஆக்கி விற்பனையில் ஈடுபட்ட நால்வரையும் நாளை வரையில் விளக்க மறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டது.

கடல் ஆமையை இறைச்சி ஆக்கியமை தொடர்பில் யாழ். மாவட்ட நீரியல் வளத் துறைத் திணைக்களம் 1996 ஆம் ஆண்டின் 2ஆம் இலக்கச் சட்டத்தின் பிரகாரம் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு இன்றைய தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட குருநகரைச் சேர்ந்த நால்வரையும் நாளை 23ஆம் திகதிவரை (புதன் கிழமை வரை) விளக்க மறியலில் வைக்குமாறு நீதிவான் நளினி சுபாஸ்கரன் உத்தரவிட்டமையோடு வழக்கையும் அன்றைய தினத்திற்கு ஒத்தி வைத்தார்.

## கண்டியில் இடிந்து விழுந்த கட்டடத்தின் இடிபாடுகளை அகற்றும் பணி தொடர்கிறது!

கண்டி – பூவெலிகட பகுதியில் இடிந்து விழுந்த கட்டடத்தின் இடிபாடுகளை அகற்றும் நடவடிக்கை நேற்று (திங்கட்கிழமை) தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. பூவெலிகட பகுதியில் நேற்றுமுன்தினம் காலை 5 மாடி கட்டடம் ஒன்று இடிந்து, அருகில் இருந்த வீட்டின் மீது விழுந்தது.

இந்த விபத்தில் அந்த வீட்டில் இருந்த தாய், தந்தை மற்றும் கைக்குழந்தையும் உயிரிழந்தனர். மேலும் இருவர் பாதுகாப்பாக மீட்கப்பட்டனர்.

இந்தக் கட்டடம் நிலையற்ற நிலத்தில் அமைக்கப்பட்டமையின் காரணமாகவே இந்த அனர்த்தம் நேர்ந்துள்ளதாக புவி சரிதவியல் ஆய்வாளர் சமந்த குமார போகாபிட்டிய தெரிவித்துள்ளார்.

அத்துடன் இந்தக் கட்டடத்திற்கு அருகில் உள்ள 3 வீடுகளில் வசித்தவர்கள் அங்கிருந்து தற்காலிகமாக வெளியேற்றப்பட்டுள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில், சீரற்ற காலநிலை காரணமாக இடிபாடுகளை அகற்றும் நடவடிக்கை நேற்று மாலை நிறுத்தி வைக்கப்பட்டிருந்த நிலையில், நேற்றுக் காலை முதல் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

## கோப் குழுவின் முதலாவது கூட்டம் இன்று நடைபெறும்

கொழும்பு, செப். 22

ஒன்பதாவது நாடாளுமன்றத்தின் கோப் எனப்படும் நாடாளுமன்ற பொது முயற்சியாண்மைக்கான செயற்குழுவின் முதலாவது கூட்டம் இன்று (செவ்வாய்க்கிழமை) நடைபெறவுள்ளது.

இதேவேளை, கோப் எனப்படும் அரச கணக்குக் குழுவின் முதலாவது கூட்டம் எதிர்வரும் 22 ஆம் திகதி இடம்பெறவுள்ளதாக நாடாளுமன்ற தொடர்பாடல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது, செயற்குழு உறுப்பினர்களின் தலைவர் தெரிவு இடம்பெறவுள்ளதாகவும் நாடாளுமன்ற தொடர்பாடல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

பொது முயற்சியாண்மைக்கான தெரிவுக் குழு மற்றும் அரச கணக்குகள் தெரிவுக் குழு ஆகியவற்றில் 44 நாடாளுமன்ற உறுப்பினர்கள் பெயரிடப்பட்டுள்ளனர்.

## கிளிநொச்சியில் 77 ஆயிரம் கிலோ கேரள கஞ்சா சந்தேக நபர்களைத் தேடி பொலிஸார் வலைவீச்சு!

கிளிநொச்சியில் 77 ஆயிரத்து 300 கிலோகிராம் எடையுடைய கேரளா கஞ்சாவை பொலிஸார் மீட்டுள்ளனர்.


இந்நிலையில் இந்தக் குற்றச்செயலுடன் தொடர்புடைய சந்தேகநபர்களைத் தேடி, பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

கிளிநொச்சி பொலிஸ் நிலைய மது ஒழிப்பு பிரிவிற்கு கிடைத்த தகவலிற்கு அமைய, நேற்றுமுன்தினம் (ஞாயிற்றுக்கிழமை) மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பின் போதே கஞ்சா பொதிகள் மீட்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி பிரதி பொலிஸ்மா அதிபர் சம்பத் குமார லியகவேின் உத்தரவிற்கு அமைவாக, சிரே;ட பொலிஸ் அத்தியட்சகர் நிசாந்த சந்திரசேகரவின் கண்காணிப்பில், உதவி பொலிஸ் அத்தியட்சகர் புஸ்பகுமார மற்றும் கிளிநொச்சி தலைமை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஜீவகஸ்த சிறிசேன ஆகியோரின் வழிநடத்தலில் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பின்போதே இவை மீட்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி ஊடாக வேறு பகுதிகளிற்குக் கடத்தப்படுவதற்காக எடுத்துவரப்பட்ட சந்தர்ப்பத்திலேயே பொலிஸார் சுற்றவளைப்பை மேற்கொண்டுள்ளனர்.

இதன்போது சந்தேகநபர்கள் தப்பியோடியுள்ளனர் எனவும் அவர்களைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன எனவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர். மேலும், 77 ஆயிரத்து 300 கிலோ கிராம் கஞ்சா, இரண்டு கையடக்க தொலைபேசிகள், படகு மற்றும் 40 கோஸ் பவர் கொண்ட இயந்திரம் ஆகியன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.



சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் மேற்கொண்டு வரும் நிலையில், சான்று பொருள்களை கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில் ஒப்படைப்பதற்கான நடவடிக்கைகளையும் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

காலைக்கதிர் Kalaikkathir

# நினைவேந்தல் தடை; வியாழனன்று தீர்ப்பு

## நாளை நகர்த்தல் பத்திரம் அணைத்து வழக்கை மீள அழைக்க எதிர்பார்ப்பு

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், செப்ரெம்பர்21

தியாக தீபம் திலீபனின் நினைவேந்தலுக்கு எதிராக யாழ்ப்பாணம் பொலிஸாரின் விண்ணப்பத்துக்கு அமைய மன்றினால் வழங்கப்பட்ட தடை உத்தரவை நீடிப்பதா அல்லது நீக்குவதா என்ற கட்டளை எதிர்வரும் 24ஆம் திகதி வியாழக்கிழமை வழங்கப்படும் என யாழ். நீதிவான் நீதிமன்றம் திகதியிட்டுள்ளது.

எதிர் மனுதாரர் சார்பில் முன்னிலையான சட்டத்தரணிகள் ஆவணங்களை சமர்ப்பித்து பொலிஸாரின் வாதத்துக்கு சரியான சட்ட ஏற்பாடுகளை முன்வைக்காத நிலையில் பொலிஸாரின் கடும் ஆட்சேபனை விண்ணப்பம் நீதிமன்றால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

எனினும், இன்று முன்னிலையாகாத எதிர் மனுதாரர்கள் தரப்பு நாளை நகர்த்தல் பத்திரம் அணைத்து வழக்கை மீள அழைத்துப் பொலிஸாரால் முன்வைக்கப் பட்ட குற்றவியல் சட்டபடி சட்டக் கோவைக்கு எதிராக தமது கடும் ஆட்சேபனையை முன்வைப்பர் என எதிர்பார்க்கப்படுகின்றது.

நல்லூரில் அமைந்துள்ள தியாக தீபம் நினைவுத் தூபியில் நினைவேந்தல் நடத்தக் கோரி மனுவில் நாடாளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திகுமார், கஜேந்திரன், யாழ்ப்பாணம் மாநகர முதல்வர் இம்மானுவேல் ஆனோல்ட், யாழ். மாநகர சபை உறுப்பினர் வரதராசா பார்த்தீபன், முன்னாள் வடக்கு மாகாண சபை அமைச்சர் அனந்தி சசிதரன், முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், சட்டத்தரணிகளான வி.மணிவண்ணன், க.சுகாஷ், அரசியல் செயற்பாட் டாளர் க.விஸ்ணுகாந்த் உள்ளிட்ட 20 பேரின் பெயர்கள் முன்வைக்கப்பட்டன.

தியாக தீபம் திலீபன் நினைவேந்தல் ஊடாக இலங்கை குற்றவியல் நடைமுறை சட்டக் கோவை 106ஆம் பிரிவின் கீழ் பொதுக் குழப்பம் ஏற்படும் என்று பொலிஸாரால் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கு யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிவான் ஏ.பீற்றர் போல் முன்னிலையில் கடந்த திங்கட்கிழமை அழைக்கப்பட்டது.

பொலிஸாரின் விண்ணப்பம் மன்றினால் ஏற்றுக்கொள்ளப்பட்டு தியாக தீபம் திலீபனின் நினைவேந்தலுக்கு தடை விதித்து உத்தரவிடப்பட்டது. அத்துடன், இந்த வழக்கில் பிரதிவாதிகள் 20 பேரையும் இன்று மன்றில் முன்னிலையாக அழைப்புக் கட்டளை சேர்ப்பிக்க உத்தரவிட்ட மன்று வழக்கை ஒத்திவைத்து.

அதனடிப்படையில் யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிவான் ஏ.பீற்றர் போல் முன்னிலையில் இன்று வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

யாழ்ப்பாணம் மாநகர சபை முதல்வர் இ.ஆனல்ட் சார்பில் சட்டத்தரணி கணதீபன் முன்னிலையாகினார். யாழ்ப்பாணம் மாநகர சபை சார்பில் வழக்கின் சான்றுப் படுத்தப்பட்ட ஆவணங்கள் கோரப்பட்டுள்ளன. அவை கிடைக்காத நிலையில் மறு தவணை ஒன்றை வரும் 25ஆம் திகதிக்கு முன்னர் வழங்குமாறு கோரினார்.

அத்துடன், மூத்த சட்டத்தரணிகள் என்.சிறிகாந்தா, வி.திருக்குமரன் மற்றும் சட்டத்தரணி சுகாஷ் ஆகியோர் இலங்கை குற்றவியல் நடைபடி சட்டக்கோவையின் 106 பிரிவின் 4ஆம் உப பிரிவின் கீழ் இந்த வழக்கை பொலிஸார் தாக்கல் செய்தமை தவறு என்று சட்ட ஏற்பாடுகள், முற் தீர்ப்புகளை வைத்து நீண்ட சமர்ப்பணத்தை முன்வைத்தனர்.

தியாக தீபம் திலீபன், தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பினர் என நிரூபிக்க அவரது வாழ்க்கை வரலாற்றை முன்வைத்து யாழ்ப்பாணம் தலைமையகப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சமர்ப்பணம் செய்தார். இரு தரப்பு சமர்ப்பணங்களை ஆராய்ந்த மன்று யாழ்ப்பாணம் மாநகர் முதல்வர் உள்ளிட்ட இருவரது சமர்ப்பணங்களை முன்வைக்கும் வாய்ப்பை தக்கவைக்கப்பட்டுள்ளதுடன், கட்டளை எதிர்வரும் 24ஆம் திகதி வியாழக்கிழமை வழங்கப்படும் என்று அறிவித்தது.

### இடம்பெயர்ந்த வாக்காளர்களின் மீளப் பதிவு தொடர்பில்

# வடக்கு இடம்பெயர்ந்தோர் மக்கள் பேரவை உதவி தேர்தல் ஆணையாளருக்குக் கடிதம்!

## கிராம சேவகர்களுக்கு உரிய வழிகாட்டல்களை வழங்குமாறு கோரிக்கை!

இடம்பெயர்ந்த வாக்காளர்கள் தமது பூர்வீக இடங்களில் மீளப் பதிவு செய்தல் தொடர்பில், வடக்கு இடம்பெயர்ந்தோர் மக்கள் பேரவை, மன்னார் உதவித் தேர்தல் ஆணையாளருக்கு அவசர கடிதம் ஒன்றை எழுதியுள்ளது.

குறித்த பேரவையின் தலைவர் எஸ்.எச்.அப்துல் மதீன் கையெழுத்திட்டு அனுப்பியுள்ள கடிதத்தின் பிரதிகள், தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேப்பிரிய மற்றும் தேர்தல் ஆணைக் குழுவின் உறுப்பினர்களான என்.ஜே. அபேசேகர, பேராசிரியர் எஸ்.ஆர்.எச்.ஹுல் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது –

1990ஆம் ஆண்டு பலவந்தமாக வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்டு புத்தளம், குருநாகல் மற்றும் இன்னோரன்ன பல மாவட்டங்களிலே வாழ்ந்து வந்த பல்லாயிரக்கணக்கான முஸ்லிம்கள், 2009 ஆம் ஆண்டு சமாதானச் சூழல் ஏற்பட்ட பின்னர், தமது சொந்தப் பிரதேசங்களுக்கு மீள்குடியேறினர். அவ்வாறு மீள்குடியேறியவர்கள், தங்களுக்கு தென் பகுதியில் வழங்கப்பட்ட உலர் உணவு மற்றும் கொடுப்பனவுகளை இல்லாமல் ஆக்கிவிட்டுத்தான் மீள்குடியேறினர்.

எனினும், அவர்களுடைய தொழில் ரீதியான மற்றும் தமது பிள்ளைகளின் கல்வி, சுகாதாரம், வைத்திய வசதிகள் போன்ற இன்னோரன்ன காரணங்களுக்காக இவர்களுடைய நிரந்தர இருப்பிடத்தை மன்னார் மாவட்டத்திலும், தற்காலிக இருப்பிடத்தை புத்தளம் மாவட்டத்திலும் ஏற்படுத்தியிருக்கின்றனர். என்றாலும், அவர்கள் மன்னாரிலும் புத்தளத்திலும் மாறிமாறி, தங்களது இடங்களில் வாழ்ந்து வருபவர்கள்.

இருந்த போதும், அவர்களுடைய வாக்குகளை தமது பூர்வீக இடங்களிலே தான் பதிவு செய்துள்ளனர். அவ்வாறான வாக்காளர்களுக்கு கடந்த நாடாளுமன்றத் தேர்தலின் போது, கொத்தணி ரீதியான வாக்களிக்கும் வசதிகள், தேர்தல் ஆணைக்குழுவினால் ஏற்பாடு செய்து கொடுக்கப்பட்டன.

இந்தநிலையில், கொத்தணி வாக்குச் சாவடிகளில் வாக்களிக்க வசதி பெற்றவர்களின், பதிவுகளை வாக்காளர் இடாப்பிலிருந்து நீக்குமாறு கிராம சேவகர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளதாக, மக்களிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது நியாயமற்றதும், அடிப்படை மனித உரிமையை மீறும் செயலுமாகும்.

மேலும், எந்தவொரு பிரஜையும் ஒன்றுக்கு மேற்பட்ட வீடுகளில் வசிப்பதற்கும் அவர்களின் வசதிக்கு ஏற்ப அவர்களை, தாங்கள் வாக்காளர்காளாக பதிவு செய்து கொள்வதற்கும் அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளதோடு, அது ஒருவரின் சட்டபூர்வமான உரிமையுமாகும்.

உதாரணமாக, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க போன்ற தலைவர்கள் கொழும்பில் வசித்து வருகின்ற போதும், அவர்கள் முறையே அம்பாந்தோட்டை, பொலனறுவை, அத்தனகல்ல ஆகிய இடங்களில் தங்கள் வாக்குகளை பதிவு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. எனவே, இந்த நாட்டின் எந்தவொரு பிரஜையும் அவர் ஒரு வீட்டை வைத்திருக்கும் பிரதேசத்தில், அவர் தன்னை ஒரு வாக்காளராகப் பதிவு செய்வதற்கு அவருக்கு உரிமையுண்டு.

கொத்தணி வாக்காளர்களாகப் பதிவு செய்தவர்கள், தங்களுடைய சொந்தக் கிராமங்களிலே மீள்குடியேறி, தற்காலிகமாகவோ அல்லது நிரந்தரமாகவோ வீடுகளை அமைத்து வாழ்ந்து கொண்டிருந்தவர்கள்தான், தினமும் அங்குமிங்குமாக சென்று வருபவர்கள். இவர்களுக்குத்தான் கொத்தணி வாக்கு வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டன.

ஒன்றுக்கு மேற்பட்ட வீடுகளில் வசிக்கும் எந்தவொரு பிரஜையும், தான் எந்த ஊரில் வாக்காளராகப் பதிவு செய்ய வேண்டும் என்பதை தீர்மானிக்கின்ற பொறுப்பு அவரையே சார்ந்ததாகும். அதேபோன்று, அந்த வாக்காளர் எடுக்கின்ற தீர்மானத்தை ஏற்றுக்கொள்வதா? இல்லையா? என்று தீர்மானிக்கும் அதிகாரமும் தேர்தல் ஆணைக்குழுவுக்கே இருக்கின்றது என்பதையும், கிராம சேவகர்களோ அல்லது உதவித் தேர்தல் ஆணையாளரோ அதனை தீர்மானிக்க முடியாது என்பதையும் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

ஆகவே, தயவு செய்து இவ்வாறானதொரு உத்தரவை தாங்கள் பிறப்பித்திருந்தால், உடனடியாக அதனை சரிசெய்து, கிராம சேவகர்களுக்கு உரிய வழிகாட்டல்களை வழங்குமாறு தாழ்மையுடன் கோருகின்றோம் –என்றுள்ளது.

## இரு மோட்டார் சைக்கிள்கள் மோதியதில் ஒருவர் பலி; மூவர் படுகாயம்



மட்டக்களப்பு, செப். 21

மட்டக்களப்பு–கொழும்பு நெடுஞ்சாலையின் மாவடிவேம்புப் பகுதியில் இன்று காலை இடம்பெற்ற வீதி விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார் எனவும், மூவர் படுகாயமடைந்துள்ளனர் எனவும் ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்தில் சித்தாண்டி திருநாவுக் கரசு வீதியை அண்டி வசிக்கும் நாகராசா சதீஸ் (வயது 22) என்பவரே உயிரிழந்துள் ளார். மாவடிவேம்பு கிராமத்தைச் சேர்ந்த எஸ்.சுபேந்திரன் (வயது 32), மகேஸ்வரன் தவசீலன் (வயது 18), கருணாகரன் தனுசன் (வயது 26) ஆகியோர் படுகாயமடைந்த நிலையில் உடனடியாக அருகிலுள்ள மாவடிவேம்பு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

நெடுஞ்சாலையில் இரு மோட்டார் சைக்கிளில் சென்றவர்கள் இடறுப்பட்டு மோதிக் கொண்டதில் இந்த விபத்து இடம் பெற்றுள்ளது. மேலும் இவ்வேளையில் காஸ் சிலிண்டர்களை ஏற்றி வந்த லொறியொன்றும் வீதியால் பயணம் செய்ததால் அந்த லொறியையும் கைப்பற்றி அதன் சாரதியிடமும் மோட்டார் சைக்கிள்களில் பயணித்தவர்களிடமும் (காயமடைந்தவர்கள்) பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## ரயிலில் மோதுண்டு ஒருவர் சாவு!



யாழ்ப்பாணம், செப். 21

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணம் செய்த ரயிலில் மோதுண்டு ஒருவர் பலியாகியுள்ளார்.

கிளிநொச்சி – ஆனந்தபுரம் பகுதியில் இன்று காலை 8:30 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறித்த நபர் நீண்ட நேரமாக அப் பகுதியில் நின்று தொலைபேசியில் உரையாடிக்கொண்டிருந்தார் எனவும், அவர் ரயில் முன் பாய்ந்து தற்கொலை செய்திருக்கலாம் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. மேலதிக விசாரணைகளை கிளிநொச்சிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# தோட்டத் தொழிலாளரின் வேலைநிறுத்தம் 10 ஆவது நாளாகவும் தொடர்கின்றது!





தோட்ட முகாமையாளருக்கு இடமாற்றம் வழங்கப்படவேண்டும் உள்ளிட்ட மேலும் சில கோரிக்கைகளை முன்வைத்து நுவரெலியா மாவட்டத்துக்குட்பட்ட நானுஓயா, உடரதல்ல தோட்ட தொழிலாளர்கள் நேற்று (திங்கட்கிழமை) 10 ஆவது நாளாகவும் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தமது கோரிக்கைகளை நிறைவேற்றப்பட வேண்டும் என பதாதைகளை தாங்கியவாறு கோஷமெழுப்பும் தொழிலாளர்கள், தீர்வு கிடைக்கும் வரை போராட்டம் தொடரும் எனவும் அறிவித்துள்ளனர்.

கெலனிவெளி பிளான்டேசன் நிர்வாகத்துக்குட்பட்ட நானுஓயா, உடரதல்ல தோட்டத்தில் சுமார் 275 தோட்ட தொழிலாளர்கள் தொழில் புரிந்து வருகின்றனர்.

எனினும், இவர்களுக்கான தொழில்சார் உரிமைகளையும் சலுகைகளையும் முகாமையாளர் (தோட்டத்துறை) திட்டமிட்ட அடிப்படையில் தடுத்து வருகிறார். ஓராண்டு காலமாக அவரின் அடக்குமுறை தொடர்வதாகவும் அதற்கு எதிர்ப்பு தெரிவித்தும் நீதி கோரியுமே கடந்த 12 ஆம் திகதி முதல் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர் என மக்கள் தெரிவிக்கின்றனர்.

இவ்விடயம் தொடர்பாக அவர்கள் மேலும் கூறியுள்ளவை வருமாறு –

பாடசாலை பிள்ளைகளைப் பாதுகாப்பாக அழைத்து செல்வதற்காக நியமிக்கப்பட்டிருந்த 'கங்காணி'மாருக்கு பெயர் போடப்பட்டு, நாள் சம்பளம் வழங்கப்பட்டது.

இவ்வாறு நியமிக்கப்பட்டிருந்த இரு கங்காணிகளை முகாமையாளர் நீக்கி விட்டு, குறைந்த சம்பளத்துக்கு இருவரை நியமித்துள்ளார். இதனை ஏற்கமுடியாது. முன்னர் இருந்த நடைமுறை தொடர வேண்டும்.

8 மணிநேரம் வேலைசெய்தாலும் அரைநாள் பெயரே போடப்படுகின்றது. கடும் மழையிலும் 18 கிலோ பறிக்குமாறு அழுத்தம். ஒரு கிலோ குறைந்தாலும் அரை நாள் பெயர். கொழுந்து அளவிடும் கருவியும் தொழில்நுட்பத்தில் இயங்குவதனால் எமது உழைப்பு களவாடப்படுகின்றது. அதாவது குறைந்த அளவீடு போடப்படுகின்றது. இவற்றையும் நாம் எதிர்க்கின்றோம்.

தேர்தல் தினத்தில் வாக்களிக்க சென்றிருந்தோம். அன்றைய தினமும் அரை நாள் பெயரே போடப்பட்டுள்ளது. கேட்டால், அரசாங்கத்திடம் கேட்குமாறு முகாமையாளர் எச்சரிக்கின்றார். எமக்கு அன்றைய நாளுக்கான முழு சம்பளம் வேண்டும். இவ்வாறு சட்டரீதியாக, தொழில் ரீதியாக எமக்கு கிடைக்க வேண்டிய உரிமைகள் மறுக்கப்படுகின்றன.

முகாமையாளரின் செயற்பாடே இதற்கு காரணம். தொழிற்சாலையும் மூடப்பட்டுள்ளது. இதனால் வெளி தோட்டத்துக்கே கொழுந்து அனுப்பப்படுகின்றது.

ஓய்வூதியம் பெற்றவர்களை அழைத்து, கொழுந்து உள்ள மலைகளில் கொழுந்து கொய்து அவர்களுக்கு குறைந்த ஊதியம் வழங்கப்படுகின்றது.

தோட்டத்தில் வேலைசெய்யும் எம்மை, கொழுந்து இல்லாத மலைகளுக்கு சென்று பறிக்குமாறு அழுத்தம் கொடுக்கப்படுகின்றது. – எனத் தொழிலாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

## தொழிலுக்காக சவூதி சென்றுள்ள 28 பேர் கொரோனாவால் மரணம்!

தொழில் நிமித்தமாக சவூதி அரேபியாவுக்குச் சென்ற இலங்கையர்களில் 28 பேர் கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்துள்ளனர்.

கடந்த 04 மாதங்களில் இந்த மரணங்கள் பதிவாகியுள்ளன என சவூதி அரேபியாவில் உள்ள இலங்கைத் தூதரக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்த 28 பேரில் இரண்டு, வீட்டுப் பணிப்பெண்களும் அடங்குகின்றனர். அதேநேரம், உயிரிழந்தவர்களின் சடலங்கள் அந்நாட்டினதும் சர்வதேச சட்டத்தின் படியும் அடக்கம் செய்யப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, நாட்டில் நேற்றைய தினம் 4 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டது.

இறுதியாக தொற்று உறுதியான மூவரும் சவுதி அரேபியாவில் இருந்து நாடு திரும்பியவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இத்தாலியில் இருந்து நாடு திரும்பிய நிலையில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த ஒருவருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டதாக அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதற்கமைய நாட்டில் கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 3 ஆயிரத்து 287 ஆக அதிகரித்துள்ளது. இதேநேரம், நாட்டில் இதுவரை கொரோனா தொற்றில் இருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 3 ஆயிரத்து 88 ஆக பதிவாகியுள்ளது. அதேவேளை, இந்த கொடிய தொற்று காரணமாக இலங்கையில் இதுவரையில் 13 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கிராமத்துக் காணியை தனிநபர் உரிமைகோரல்!

### வவுனியாவில் மக்கள் எதிர்ப்பு





வவுனியா, மாணிக்கர் இலுப்பைக்குளம் பகுதியில் உப குடும்பங்களுக்குச் சேரவேண்டிய 20 ஏக்கருக்கும் மேற்பட்ட காணியை மன்னாரை சேர்ந்த ஒருவர் உரிமை கோருகிறார் என மாணிக்கர் இலுப்பைக்குளம் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், குறித்த பிரச்சினையை முன்னிறுத்தி கிராம மக்களால் நேற்றுமுன்தினம் (ஞாயிற்றுக்கிழமை) ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதுதொடர்பாக மக்கள் தெரிவிக்கையில் –

மன்னாரை சேர்ந்த ஒருவர் எமது பகுதியில் வந்து 20 ஏக்கர் காணியை குத்தகைக்கு எடுத்து செய்துவந்தார்.

தற்போது கிராமத்தில் உள்ள பொதுக்காணியை காணியற்ற உப குடும்பங்கள் துப்புரவு செய்து வேலி அடைத்திருந்த நிலையில், அதைத் தனது காணியென்றும் அதற்கான பத்திரம் தன்னிடம் இருப்பதா கவும் எங்களை அச்சுறுத்துகின்றார்.

இதுதொடர்பாக, அவர் பொலிஸில் முறையிட்டு பொலிஸாருடன் வந்து எம்மை அச்சுறுத்தியமை யுடன் காணியின் வேலியையும் அகற்றியுள்ளார்.

எமது மக்களுக்குச் சேரவேண்டிய காணியை வெளியிடத்தைச் சேர்ந்த ஒருவர் உரிமை கோருவதுடன் அச்சுறுத்தல் விடுப்பதை எம்மால் ஏற்கமுடியாது. எனவே, எமக்கு உரிய தீர்வினைத் தரவேண்டும் என அவர்கள் கோரிக்கை விடுத்தனர். இந்நிலையில், போராட்டம் இடம்பெற்ற பகுதிக்குச் சென்றிருந்த நாடாளுமன்ற உறுப்பினர் திலீபன், இவ்விடயம் தொடர்பாக பிரதேச செயலாளருடன் கலந்துரையாடி தீர்வை வழங்குவதாக தெரிவித்ததையடுத்து பொதுமக்கள் கலைந்துசென்றனர்.

## வீதி ஒழுங்கை மீறும் சாரதிகளுக்கு ஆலோசனை வழங்கும் வகுப்புக்கள்

கொழும்பு, செப்.22

கொழும்பின் 4 மார்க்கங்களில் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ள வீதி ஒழுங்கு விதிகளை மீறும் சாரதிகளுக்கு நேற்று (திங்கட்கிழமை) முதல் ஆலோசனை வழங்கும் வகுப்புகளை நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

வீதி ஒழுங்கு விதிகளை மீறுவோரை அடையாளம் காணும் விசேட நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாக போக்குவரத்து கட்டுப்பாட்டு மற்றும் வீதி பாதுகாப்பிற்கு பொறுப்பான பிரதி பொலிஸ் மா அதிபர் சுமித் நிங்க குறிப்பிட்டுள்ளார்.

கடந்த ஒரு வார காலமாக பொதுமக்களின் நலன் கருதி கொழும்பு நகரிலும் அதனை அண்மித்த நகர்ப்புறங்களிலும் அதிகமான பொலிஸார் சேவையில் ஈடுபடுத்தப்பட்டு சாரதிகளுக்கும் பாதசாரிகளுக்கும் உரிய வழிகாட்டல்களை வழங்கி வருகின்றனர்.

பஸ்களுக்காக தனியான வழித்தடம் ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், அதன் தொடர்ச்சியாக மோட்டார் சைக்கிள்களும் ஓட்டோக்களும் வீதிகளில் அதே வழித்தடங்களில் பயணிக்க வேண்டும் என அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.

இந்த நடைமுறை எதிர்வரும் நாள்களிலும் தொடரவுள்ளதாக போக்குவரத்து கட்டுப்பாட்டு மற்றும் வீதி பாதுகாப்பிற்கு பொறுப்பான பிரதி பொலிஸ் மா அதிபர் சுமித் நிங்க தெரிவித்துள்ளார்.

எனினும் கடந்த வாரத்தை போலல்லாது வீதி ஒழுங்கு விதிகளை மீறும் சாரதிகள் கண்காணிக்கப்படவுள்ளனர் எனவும் அவர் கூறியுள்ளார்.

ட்ரோன் கமெரா மூலம் வாகன போக்குவரத்து கண்காணிக்கப்படுவதாகவும் பிரதி பொலிஸ் மா அதிபர் சுமித் நிங்க குறிப்பிட்டுள்ளார்.

விதிமுறைகளை மீறும் சாரதிகளுக்கு அந்தப் பகுதியில் வைத்து சட்ட நடவடிக்கை எடுக்கப்பட மாட்டாது எனவும் குறித்த வாகனத்தை பதிவு செய்த உரிமையாளரை அடையாளங்கண்டு விவரங்கள் திரட்டப்படவுள்ளன.

அவ்வாறு திரட்டப்படும் விலாசங்களுக்கு, வீதி நடைமுறைகளை பின்பற்றுவதற்கான ஆலோசனை வகுப்புகளில் பங்கேற்குமாறு அறிவித்தல் பிறப்பிக்கப்படவுள்ளது.

தவறிழைத்த சாரதிகள், இந்த வகுப்புகளுக்கு சமுகமளிப்பது கட்டாயமானது என போக்குவரத்து கட்டுப்பாட்டு மற்றும் வீதி பாதுகாபபுக்குப் பொறுப்பான பிரதி பொலிஸ் மா அதிபர் சுமித் நிங்க தெரிவித்துள்ளார்.

HIKVISION Mega Store
No 1 Worldwide CCTV and Video Surveillance
கிக் விஷன் மெகா ஸ்ரோர்
வடமாகாண பிரதான நிறுவுநர் மற்றும் காட்சியாளர்
(Main Show Room in Northern Province)
உங்கள் வீடுகள், அலுவலகங்கள், வங்கிகள், கோயில்கள் மற்றும் பொதுப் பராமரிப்பு நிலையங்களின் பாதுகாப்பினை சிறந்த முறையில் கண்காணிப்பை உறுதி செய்வதற்கு, குறித்த தவணையில் நம்பகத் தரமான முதற் தர சீ.சீ.ரிவி கமராக்கள் பொருத்தித்தரப்படும்.



நம்பகத் தரமான முதற் தர சீ.சீ.ரிவி கமராக்கள் மற்றும் உதிரிப்பாகங்களை இங்கு பெற்றுக் கொள்ளலாம்
HIKVISION



Hot Line -021 222 7126
077 473 6057
077 2871 841
077 899 2923
இல - 164, பலாலி வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
164, Palaly Road, Thirunelvely, Jaffna
hikvisionmegastore@gmail.com

# ஹெரோயினுடன் இளம் பெண் கொழும்புத்துறையில் கைது!

யாழ்ப்பாணம் கொழும்புத்துறை பகுதியில் யாழ்ப்பாண மதுவரித் திணைக்கள அதிகாரிகளால் 185 மில்லிகிறாம் ஹெரோயின் போதைப்பொருளுடன் அதே இடத்தைச் சேர்ந்த 18 வயதுடைய இளம் யுவதி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று திங்கட்கிழமை மதியம் 2 மணியளவில் மதுவரி திணைக்கள அதிகாரிகளுக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து இந்த யுவதி யாழ் . கொழும்புத்துறை பகுதியில் ஹெரோயினை மறைத்து வைத்திருந்த வேளையில் மதுவரித் திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்ட நபரை நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மதுவரி உதவி ஆணையாளர் வடமாகாணம் பிரபாத் ஜெயவிக்கிரவின் வழிநடத்தலின் கீழ் யாழ்ப்பாண மதுவரித் திணைக்கள பொறுப்பதிகாரி ரகுநாதன் தலைமையிலான சக மதுவரி பரிசோதகர் ஏ.ரசிகரன் மற்றும் வாசுகி ஆகியோர் கொண்ட குழு அணியினரால் இந்தக் கைது சம்பவம் இடம்பெற்றுள்ளது

அண்மைய நாளகளில் யாழ்ப்பாண குடாநாட்டில் பல்வேறு இடங்களில் ஹெரோயின் மற்றும் கஞ்சா போதைப் பொருள்கள் முப்படையினர் மற்றும் மது வரித்திணைக்களத்தினரால் கைப்பற்றப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## எமது ஆருயிர் நண்பனுக்கு கண்ணீர் அஞ்சலி



**பீ.கே. பாலசிங்கம் பாலசங்கர்**

போய் வா நண்பா!
உன் நினைவுகள் என்றும்
எம் நெஞ்சில் நினைவழியா
நிலைத்திருக்கும்.

யாழ் இந்து நண்பர்கள்
1988ஆம் ஆண்டு அணி

# மரண அறிவித்தல்

## லயன் P.K.பாலசிங்கம் பாலஸங்கர்

(முகாமைத்துவ உதவியாளர்-பிரதேச செயலகம்-உடுவில், முன்னாள் தலைவர், லயன்ஸ் கழகம்-நல்லூர்)



இல.718. "சங்கரியார் வளவு", சிவலிங்கப்புளியடி, வண்ணார்பண்ணையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட லயன் P.K பாலசிங்கம் பாலஸங்கர் (முகாமைத்துவ உதவியாளர், பிரதேச செயலகம், உடுவில்), நேற்று (20.09. 2020) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற P.K பாலசிங்கம் "படியாதவன்" (ஓய்வுநிலை ஆசிரிய ஆலோசகர்- விஞ்ஞானம்) மற்றும் சிவபதிமலர் தம்பதியரின் அன்பு மூத்த மகனும், காலஞ்சென்ற தங்கராசா மற்றும் சந்திராதேவி தம்பதியரின் அன்பு மருமகனும், பிரபாலினியின் (உதவி முகாமையாளர், SLT Jaffna) பாசமிகு கணவரும், பாலரிஷாந் (பழைய மாணவன்-யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி 2017 A/L, HND in Quantity Surveying), பாலசிவானுஜன் (பழைய மாணவன்-யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி 2019 A/L), பாலசுஜித் (மாணவன்- யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி-தரம் 09) ஆகியோரின் அன்புத் தந்தையும், பாலமயூரகனின் (கனடா) அன்புச் சகோதரனும், சோபனாவின் அன்பு மைத்துனரும், கௌசிக், அஸ்வின் (கனடா) ஆகியோரின் பெரிய தந்தையும், காலஞ்சென்ற குமாரகுலசிங்கம்-தவமணி, செல்வி யோகேஸ்வரி (ஓய்வு நிலை பிரதி அதிபர்-யாழ் இந்து மகளிர் கல்லூரி), ராஜேஸ்வரி (ஓய்வுநிலை பிரதி அதிபர், முஸ்லிம் மகா வித்தியாலயம், வவுனியா)- சுந்தரநடராஜன் (ஓய்வுநிலை அதிபர்), ரத்தினேஸ்வரி (ஓய்வுநிலை உத்தியோகத்தர், பிரதேச செயலகம்-உடுவில்)-காலஞ்சென்ற ஜெயபாலன் ஆகியோரின் பெறாமகனும், தயாளினி, மகேந்திரராஜா (சுவிஸ்), சாலினி (சுவிஸ்) ஆகியோரின் மைத்துனரும், ஜெயந்தன் (அதிபர்-வசாவிளான் மத்திய கல்லூரி), ரகுபதி, வளர்மதி (சுவிஸ்) ஆகியோரின் உடன்பிறவா சகோதரரும், காலஞ்சென்ற சிவஞானகுரு- புவனேஸ்வரி, காலஞ்சென்ற சிவலிங்கம் மற்றும் காந்திமதி, காலஞ்சென்ற சிவபாலன் (சிறாப்பர்) மற்றும் கனகமணி ஆகியோரின் அன்பு மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.09.2020) செவ்வாய்க்கிழமை காலை 7.00 மணிக்கு ஆரம்பித்து முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

021 222 3118, 071 430 4761
00141 68244581 (சகோதரன்-கனடா)

தகவல்: பிரபாலினி (மனைவி)
பாலரிஷாந் (மகன்), பாலசிவானுஜன் (மகன்), பாலசுஜித் (மகன்),
பாலமயூரன் (தம்பி)

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 22.09.2020 இல் வெளியிடப்பெற்றது.